Registered as a news paper.

பக்கங்கள்: பத்து

விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

English Academy
210, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
Email: thangan 672002 @ yahoo.com
T.P. - 021-2222588
210, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
பிரதான வீதி, சித்தன்கேணி.
Enrol your Children for Better results
சிறந்த பெறுபேற்றுக்கு உங்கள் பிள்ளைகளை சேருங்கள்
(சி-474)

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 தை 05 ஆம் நாள், ஹிஜ்ரி 1423 துல்கஃதா 15 (19.01.2003) ஞாயிற்றுக்கிழமை இதழ் : 110

# ராணுவப் புலனாய்வுத்துறை மீது பிரதம மந்திரி ரணில் பாய்ச்சல்!

## கிழக்கில் புலிகளின் ஆட்சேர்ப்பு; தவறான தகவல் தரப்பட்டதாம்!



(கொழும்பு)

**கிழக்கில் விடுதலைப்புலிகள் ஆட்சேர்ப்பு செய்து வருவதாகவும், சிறுவர்களைக் கடத்தி வைத்திருப்பதாகவும் தவறான தகவல்களைத் தந்ததாக இராணுவத்தின் புலனாய்வுத் துறை மீது பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கடுமையான குற்றச்சாட்டை சுமத்தியுள்ளார். இதனால் - புலனாய்வுத் தகவல்களில் சந்தேகமே கிளம்புவதாகவும் அவர் சாடினார்.**

இது பற்றி அலரி மாளிகையில் படைத்தளபதிகளுடனான உயர் மட்டச் சந்திப்பொன்றில் அவர் மேலும் தெரிவித்ததாவது-

இராணுவம் சரியான புலனாய்வுத் தகவல்களைத் திரட்டுவதில்லை என்ற சந்தேகம் கிளம்பியிருக்கிறது. இராணுவத்தின் புலனாய்வுத் தகவல்களின் உண்மைத் தன்மைகள் குறித்து சந்தேகங்கள் ஏற்பட்டிருக்கின்றன. சரியான தகவல்களை இராணுவப் புலனாய்வுத்துறை திரட்டிக்கொள்வதில்லை.

அத்துடன் இராணுவ இரகசியங்களையும் அது காப்பாற்றிக் கொள்வதில்லை. இரகசியத் தகவல்களை ஊடகங்களுக்கும்,பிறருக்கும் இராணுவப் புலனாய்வுத்துறை வழங்கியிருக்கின்றது. (10 ஆம் பக்கம் பார்க்க)

## ஜப்பானின் அமைதி முயற்சி இந்தியா தடுக்க முடியாது

### கொழும்பில் செய்தியாளர் மத்தியில் அகாஷி



அரசாங்கத்திற்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையே நடைபெறும் சமாதானப் பேச்சுவார்த்தைக்கு வேண்டிய சகல உதவிகளையும் ஜப்பான் வழங்கும். ஆனால் அரசியல் ரீதியான அல்லது மத்தியஸ்தம் வகிக்கும் நடவடிக்கைகளில் ஜப்பான் ஈடுபடாது. நோர்வே அந்தப்பணியை சிறப்பாக செய்கின்றது என இலங்கைக்கான ஜப்பான் நாட்டின் விசேட சமாதானத் தூதுவர் யசுஷி அகாஷி தெரிவித்தார்.

நேற்றிரவு கொழும்பு ஹில்டன் ஹோட்டேலில் இடம் பெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் தனது இலங்கைக்கான நான்கு நாள் விஜயம் குறித்து விளக்கிக்கூறியபோதே (10 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவப் புலனாய்வுத்துறையால் ஆபத்துக்குள் சிக்கும் அரசாங்கம்

### எச்சரிக்கின்றார் திலக் மாரப்பன

(கொழும்பு)

இராணுவப் புலனாய்வுத்துறையின் தவறான அறிக்கைகள் சில சமயங்களில் அரசாங்கத்தை ஆபத்தான கட்டத்துக்குள் தள்ளுவதாக அமைந்திருப்பதாக பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன தெரிவித்திருக்கின்றார்.

கொழும்பில் படைத்தளபதிகளுடன் நடாத்திய உயர் மட்டக் கலந்துரையாடலில் பேசும்போதே அவர் இக்கருத்தை தெரிவித்திருக்கின்றார்.

இராணுவப்புலனாய்வுத்துறை தரும் (10 ஆம் பக்கம் பார்க்க)



## பொடா சட்டத்தின் கீழிருந்து புலிகளின் பெயரை நீக்குக

### நெடுமாறன் உச்சநீதிமன்றில் வழக்கு

இந்தியாவின் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் (பொடா) இணைப்பில் விடுதலைப்புலிகளின் பெயரும் இணைக்கப்பட்டிருப்பது நியாயமற்றது என்றும், புலிகளின் பெயரை பொடா சட்டத்திலிருந்து நீக்க உத்தரவிட வேண்டும் என்றும் புதுடெல்கீ உச்ச நீதிமன்றத்தில் தமிழ்த்தேசிய இயக்கத் தலைவர் பழ.நெடுமாறன் வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

இதேவேளை- இது போன்ற பல வழக்குகளும் தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் இவற்றுக்கான செலவீடுகளை ஈடுசெய்து, நியாயத்தைப் பெறும் முயற்சில் வெற்றிபெற (10 ஆம் பக்கம் பார்க்க)

## கோபி அனான் வரும்போது சாகும் வரை உண்ணாவிரதம்

### களுத்துறை சிறைக் கைதிகள் அறிவிப்பு

ஐக்கிய நாடுகள் பொதுச்செயலாளர் கோபி அனான் இலங்கை வரும்போது, சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பிக்கப் போவதாக களுத்துறை தமிழ் அரசியற் கைதிகள் அறிவித்துள்ளனர்.

சமாதானச் சூழ்நிலை நிலவும் காலத்தில் எம்மை பயங்கரவாதிகள் என முத்திரை குத்தி சிறைகளில் அடைத்து வைத்திருப்பது அர்த்தமற்றது. இதை சர்வதேச சமூகத்திற்கு வெளிக்காட்டவே கோபி அனான் இலங்கை வரும்போது (10 ஆம் பக்கம் பார்க்க)

## சிறானுக்கு 35 மில்லியன் ரூபா இன்று கிடைக்கும்

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் இயங்கும் சிறான அலுவலக செயற்பாட்டுக்கு ஜப்பான் அரசாங்கம் தருவதாக உறுதி கூறிய 35 மில்லியன் ரூபா இன்று வழங்கப்படலாம் என சிறான் பணிப்பாளர் இரேனியஸ் செல்வின் தெரிவித்தார்.

இந்தப் பணம் கிளிநொச்சியில் உள்ள இலங்கை வங்கிக் கிளையில சிறான் கணக்கில் முதலிடப்படவுள்ளதாகவும் தெரியவருகின்றது.

## அமைதிக்கான அமெரிக்க உதவி செயற்பாட்டிலும் கிடைக்கும்

### கொலின் பவல் அறிவிப்பு



இலங்கையின் சமாதான முயற்சிகளின் முன்னேற்றம் குறித்து அமெரிக்கா உன்னிப்பாக அவதானித்து வருவதாகவும் பேச்சளவில் மட்டுமல்லாது உறுதியான செயற்பாட்டு ஒத்துழைப்பை வழங்கவும் உறுதி பூண்டுள்ளதாக அமெரிக்க இராஜாங்க அமைச்சர் கொலின் பவல் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவுக்கான புதிய இலங்கைத் தூதுவர் தேவிந்த ஆர். சுபசிங்கவுக்கு வரவேற்பளித்தபோது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

புதிய தூதுவருக்கான நியமனக் கடிதங்களின் பிரதிகளை கொலின் பவலிடம் கையளிக்குமுகமாக அவரது (10 ஆம் பக்கம் பார்க்க)

## 10 எம்.பிக்களுடன் மஹிந்த ராஜபக்ஷ யாழ்.வருகின்றார்

(நமது நிருபர்)

எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ தலைமையில் பொதுஜன ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த பத்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாளை யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளனர்.

இந்து சமய விவகார அமைச்சர் தி.மகேஸ்வரனின் அழைப்பின் பேரில் யாழ். வரும் எதிர்க்கட்சித் தலைவர் மகிந்தராஜபக்ஷ நாளை காலை 11 மணிக்கு 50 லட்சம் ரூபா செல (10 ஆம் பக்கம்பார்க்க)

## உயர் பாதுகாப்பு வலயங்களால் மக்கள் உரிமை பறிக்கப்படுகிறது

### பிரிட்டிஷ் தூதுவருக்கு தமிழ்ச் செல்வன் எடுத்துக்கூறினார்

(கிளிநொச்சி)

பிரித்தானிய உயர் ஸ்தானிகராலய குழுவினர் தமிழீழ அரசியற் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை நேற்று சந்தித்தனர்.

நேற்று முற்பகல் 11.30 மணிக்கு கிளிநொச்சி அரசியற்துறை பணிமனைக்கு வந்த தூதுக்குழுவினரை தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் கைலாகு கொடுத்து வரவேற்று, பேச்சுவார்த்தை இடம்பெறும் மண்டபத்திற்கு அழைத்துச் சென்றார்.

ஒன்றரை மணிநேரத்திற்கும் அதிகமாக இச்சந்திப்பு இடம்பெற்றது.

பிரித்தானிய உயர்ஸ்தானிகராலய தூதுக்குழுவில் -இலங்கைக்கான பிரித்தானிய தூதுவர் ஸ்ரீபன் எவன்ஸ், பிரித்தானியாவின் தெற்காசிய திணைக்கள மற்றும் பொது (10 ஆம பக்கம் பார்க்க)

### விண்ணாணம் விநாசியர்



அரசாங்கத்தார் இப்பவாகிலும் உண்மையைத் தேட துடங்கியிருக்கினமே...

# ஈராக் மீது யுத்தம் வேண்டாம்; உலகம் தழுவிய எதிர்ப்பு தீவிரம்

(வொஷிங்ரன்)

ஈராக் மீது அமெரிக்கா ஜனவரி 27 ஆம் திகதியின் பின்னர் தாககுதல் நடத்தலாம் என்ற அச்சத்தின் காரணமாக அமெரிக்காவின் பெரும் நகரங்கள் உட்பட உலகளாவிய ரீதியில் - ஈராக் மீதான தாக்குதல்களை எதிர்த்து ஆர்ப்பாட்டங்கள் தீவிரம் பெற்று வருகின்றன.




நேற்று அமெரிக்காவின் தலைநகர் வொஷிங்ரனில் ஆயிரக்கணக்கான எதிர்ப்பாளர்கள், புஷ் நிர்வாகத்தின் மீது அமைதியான முறையில் தமது எதிர்ப்பினைக் காட்டியுள்ளார்கள். வொஷிங்ரனில உள்ள கடற்படைத்தளத்தில் ஆரம்பமான பேரணி நகர் முழுவதும் தனது எதிர்ப்புக்களை அமைதியான முறையில் தெரிவித்தது.

இதேபோல அமெரிக்காவின் நியூயோர்க் நகரிலும் பிறிதொரு பேரணி ஈராக் மீதான தாக்குதல்களை எதிர்த்து நடாத்தப் பட்டது.

அமெரிக்க நகரங்களை விட ஈராக் மீதான தாக்குதலை எதிர்த்து ஜப்பான், பாகிஸ்தான் மற்றும் மத்திய கிழக்கு நாடுகள், ஐரோப்பிய நாடுகள் ஆகியவற் றிலும் எதிர்ப்புப் பேரணிகள் நடைபெற்றுள்ளன.

பாகிஸ்தானில் 10 கிலோமீற்றர் நீளமான மனிதச் சங்கிலிப் போராட்டத்தில் பாகிஸ் தானியர் ஈடுபட்டனர்.

இவற்றினை விட ஈராக் மீதான தாக்குதலை எதிர்த்து எகிப்து, பெல்ஜியம், பிரித்தானியா, பிரான்ஸ், ஜேர்மனி, இத்தாலி மற்றும் ஸ்பெயின் ஆகிய நாடுகளில் எதிர்ப்புப் பேரணிகள் நடைபெற திட்டமிடப்பட்டுள்ளது.

இதேவேளை -

அமெரிக்க ஜனாதிபதி மாநிலங்களவையில் உரையாற்றுவதற்கு தயாராகி வருவதால் - ஈராக் மீதான தாக்குதல் பற்றிய தனது நிலைப்பாட்டினை அப்போது வெளிப்படுத்துவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதனால், இந்த உரை பற்றிய எதிர்பார்ப்பு பலமாக வலுத்து வருகின்றது.

# அவுஸ்திரேலிய தலைநகருகே பெரும் காட்டுத் தீ பரவுகிறது!

## அவசரகாலநிலை பிரகடனம்

அவுஸ்திரேலிய தலைநகர் கன்பராவில் காட்டுத் தீ மிகவும் வேகமாகப் பரவி வருகின்றது. இதனையடுத்து தலைநகர் கன்பராவில் அவசரகால நிலைமை பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது.

தீயினால் ஏற்பட்ட வெப்பக்காற்றினால் முப்பதிற்கும் மேற்பட்ட குடியிருப்புப் பகுதிகள் மிகவும் பாதிக் கப்பட்டுள்ளன.


கொளுந்துவிட்டெரியும் தீ

உலகவலம்

கடந்த ஐம்பது வருடங்களுக்குள் இடம்பெற்றுள்ள மிக மோசமான காட்டுத் தீ இதுவெனக் கூறப் படுகின்றது.

ஆயிரக்கணக்கான படையினரும் தீயணைப்பாளர்களும் தீயுடன் போராடிய போதும் - தீ இதுவரையும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்படவில்லை என்பது குறிப்பிடத் தக்கது.

இதுவரை பரவிய தீயினால், ஒருவர் உயிரிழந்துள்ளதாகவும் பன்னிரெண்டு பேர் எரிகாயங்களுக் குட்பட்டுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.


## கண்ணீர் அஞ்சலி

எங்கள் ஆலய பிரதமகுரு
பரமேஸ்வரக்குருக்கள் அவர்களின் தந்தையார்
ப. இரகுநாதசர்மா
(காரைநகர் பாலா ஓடை அம்மன் கோயில் பிரதமகுரு) அவர்களின் மறைவை ஒட்டி துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்துக்கு எங்கள் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.
- பரிபாலன சபையினர்,
இத்தியடி வீரகத்தி விநாயகர் தேவஸ்தானம்.
சங்கத்தானை,
சாவகச்சேரி. (210)

## MEDICAL CHECK UP
## வைத்திய பரிசோதனை

நோய் வருமுன் காப்போம்!
திடீர் மரணத்தைத் தவிர்ப்போம்!
* 40 வயதுக்கு மேற்பட்ட நோய் உள்ள, நோய் அற்ற அனைவரும் இந்த MEDICAL CHECK UP ஐ செய்வதன் மூலம் நோயற்ற சுகவாழ்வு வாழலாம்.
* X-RAY, ECG, சில முக்கிய இரத்தப் பரிசோதனைகள், சிறுநீர்ப் பரிசோதனை.
இலவச வைத்திய ஆலோசனையுடன் கூடிய MEDICAL CHECK UP
குறைந்த கட்டணத்தில்! விவரங்களுக்கு நேரில்!
போக்குவரத்து வசதி கருதி
சம்பந்தர் மொடேர்ன் கிளினிக்
(அமுல் கிறீம் ஹவுஸ் அருகில்) ஆஸ்பத்திரி (முன்) வீதி, யாழ்ப்பாணம்.
(சி-513)


## இன்றைய நாள் இனிய நாள்

**19-01-2003 - ஞாயிற்றுக்கிழமை**

தைப்பூசம்

| | |
|---|---|
| மேடம் | :- திரவிய லாபம், இராச பயம், தீமை, புத்திக்கேடு, சிநேக நன்மை. |
| இடபம் | :- தொழில் சித்தி, நோய், பொருள் வரவு, புத்தி குறைவு, கவலை. |
| மிதுனம் | :- வியாதி, லட்சுமி கடாட்சம், தொழில் சித்தி, குடும்ப சுகம். |
| கர்க்கடகம் | :- பிரயாண கஷ்டம், அதிக செலவு, மனச்சோர்வு, புத்திரரால் கவலை. |
| சிங்கம் | :- தொழில் உறுதி, அதிக பிரயாசை, நல்ல வாழ்க்கை, வாகன லாபம். |
| கன்னி | :- மகிழ்ச்சி, அதிகலாபம், உற்சாகம், திரவிய லாபம், களஸ்திர சுகம். |

பிரபல சோதிடர்
எஸ்.குகநேசன்

| | |
|---|---|
| துலாம் | :- சிறைப் பயழ், பொருட்சேதம், வாகன சேதம், தனநாசம். |
| விருச்சிகம் | :- காரியசித்தி, தேகசுகம், மனப்பயம், தனவரவு, சந்தோஷம் |
| தனு | :- லட்சுமி கடாட்சம், சத்துரு பீடை, மனக்கவலை, குடும்பசுகம். |
| மகரம் | :- பெண்களால் நன்மை, சுபயோகம், தொழில் விருத்தி, அலைச்சல். |
| கும்பம் | :- தேகபீடை, பொருள் சேதம், சத்துருபீடை, மனப்பயம் |
| மீனம் | :- பிரயாணம், தின்லாபம், காரிய வெற்றி, நிலைப்பிரிவு. |


## சிறு விளம்பரம்

**ஆங்கில வகுப்புக்கள்**

O/L, A/L, பல்கலைக்கழக மாணவர்களுக்கான ஆங்கில வகுப்புகள் - சிறுசிறு குழுக்களாக, அடிப்படையிலிருந்து கற்பிக்கப்படும். தொடர்பு: நாகேந்திரம், 34/4 (புதியது 82/24), செட்டித்தெரு, நல்லூர், யாழ்ப்பாணம். (207)

**மூக்குக்கண்ணாடி**

1962 ஆம் ஆண்டு தொடக்கம் வெலிங்டன் திரையரங்கு முன்பாக இயங்கிய மொறாயஸ் மூக்குக் கண்ணாடியகம், தற்பொழுது - பலாலி வீதி, அப்பலோ கிளினிக் முன்பாக இயங்குகின்றது என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகின்றோம். (மொறாயஸ்) ஒளிச்சுடர் பல்மூக்குக் கண்ணாடியகம், யாழ்ப்பாணம். (சி-456)


## யாழ்.குடாநாட்டில் நேற்று...

### பல்கலையில் சமஷ்டிக் கருத்தரங்கு



'சமஷ்டி மயப்படுத்தலில் சந்தர்ப்பங்களும் சவால்களும்' என்ற கருப்பொருளில் பெண்கள் அபிவிருத்தி நிலையம் நடாத்தும் கருத்தரங்கு நேற்று யாழ்.பல்கலைக்கழக புவியியற்துறை மண்டபத்தில் ஆரம்பமானது. இதன்போது, கொழும்பு 'ப்ரெட்ரிக் ஈபேர்ட் ஸ்ரிவ்ரங்' நிறுவனத்தின் வதிவிடப்பிரதிநிதி டீட்மர் நெய்ற்ஸ்செல் கருத்துரை வழங்குவதைப் படத்தில் காணலாம்.

### கல்வி மேம்பாட்டுப் பேரவைக் கூட்டம்



யாழ்ப்பாணம் கல்வி மேம்பாட்டுப் பேரவையின் பொதுக்கூட்டம் நேற்று யாழ்.கல்வி வலய மாநாட்டு மண்டபத்தில் பேரவைத் தலைவர் பேராசிரியர் அ.சண்முகதாஸ் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் தமிழீழ கல்விக்கழகப் பொறுப்பாளர் வே.இளங்குமரன், துணைப்பொறுப்பாளர் அருண் மாஸ்ரர் உட்பட கழக உறுப்பினர்கள் பலரும் பங்குபற்றினர். இங்கு இந்தக்கல்வியாண்டிற்குரிய கல்வி மேம்பாட்டு திட்ட நகல்களை குழுக்களூடாகச் சமர்ப்பித்து அவை தொடர்பான கலந்துரையாடல்கள் இடம்பெற்றன.


நிறைஞ்சனாஸ் சங்கானை
காட்சி நேரம்: 11..00, 2.45, 6.00 (பு.நே.)
ஜெயசூர்யா, காவ்யா நடித்த
என் மன வானில்
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.30 காட்சி
SPIDER MAN
(சி/397)

ராஜா
யாழ்ப்பாணம்.

இலங்கையிலும் இந்தியாவிலும்
ஒரே தின வெளியீடு
விஜய், ஸ்நேகா
நடித்த
வசீகரா
10.30, 2.30,
6.00,9.30
ரிக்கற்றுக்களை முன்பதிவு செய்துகொள்ளவும்.
(சி-398)

## தேவை

1) தொழிலாளி -ஆண்/பெண்.
2) தாதி உத்தியோகத்தர்.
3) பதில் கடமைக்கான மருத்துவர்கள்.

விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:
பணிப்பாளர், "சென்றல் நர்ஸிங் ஹோம்"
350, பலாலி வீதி, திருநெல்வேலி. (209)

## ஒலிபரப்பாளர் பயிற்சி நெறி



1. ஒலிபரப்பு வரலாறு
2. தொடர்பியல்
3. அறிவிப்பு
4. செய்திஅறிக்கைத் தயாரிப்பு
5. செய்திவாசிப்பு
6. நேர்காணல்
7. நேர்முக வர்ணனை
8. மேடை நிகழ்ச்சித் தொகுப்பு
9. தயாரிப்பு
10. நிகழ்ச்சி அமைப்பு (தேசிய வர்த்தக விளம்பர நிகழ்ச்சிகள்)
11. கலையக இயக்கம்
12. கலையக பயிற்சி

இவையனைத்தும் எமது பாடத்திட்டத்தினுள் அடங்கும்.

அனுபவம் மிக்க ஒலிபரப்பாளர்கள் மூலம் கற்றுத் தரப்படும்.

காலம் 3 மாதம் — பரீட்சை முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்

ஒரு ஒலிபரப்பாளராக உருவாக ஆசைகொண்ட நீங்கள்
இப்பயிற்சி நெறியில் கலந்து கொண்டு உங்கள் இலட்சியத்தை இலகுவாக்குங்கள்

நீங்கள் பயிற்சிக்காக கொடுக்கும் பணத்தை உங்கள் திறமையால் மூன்றுமாதத்தில் மீளபெற வாய்ப்பு

December மாதம் புதியவகுப்புகள் ஆரம்பம்

Call: 074-512830

ரூபா 4.50 சதம் முத்திரை ஒட்டப்பட்ட தபாலுறையுடன் சுயவிபரக்கோவையை அனுப்பவேண்டிய முகவரி.

Mass Media Institute of Ceylon
2nd Floor, "Colombo Plaza" (Adjoining Wellawatte Mosque)
50, Galle Road, Colombo - 06.

# தேர்தல்முறை மாற்றம் பற்றி ஆராய நாடாளுமன்றக் குழு

## அனைத்துக் கட்சிகள் மத்தியிலும் இணக்கம்

(கொழும்பு)

தற்போது நடைமுறையிலுள்ள தேர்தல் முறைமையை மாற்றியமைப்பது குறித்து ஆராய்வதற்காக நாடாளுமன்றக் குழுவொன்றை அமைக்க வேண்டும் என அனைத்துக்கட்சிகள் மத்தியிலும் கருத்து ஒற்றுமை ஏற்பட்டிருப்பதாகக் கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தற்போதுள்ள தேர்தல் முறை மாற்றம் செய்யப்பட வேண்டும் என அனைத்துக் கட்சிகளும் விரும்புகின்றன. ஆட்சியிலுள்ள ஐ.தே.மு. - 168 உறுப்பினர்கள் தொகுதிவாரியாகவும், எஞ்சிய உறுப்பினர்கள் விகிதாசார ரீதியிலும் நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட வேண்டும் எனக் கருத்துத் தெரிவித்திருக்கிறது.

இதேபோல, பொ.ஐ.மு. - 164 உறுப்பினர்கள் தொகுதிவாரியாகவும் எஞ்சிய 61 உறுப்பினர்கள் விகிதாசார ரீதியிலும் தெரிவுசெய்யப்படவேண்டும் என விருப்பம் தெரிவித்துள்ளது.

அநேகமான சிறுபான்மைக் கட்சிகள் ஜேர்மன் தேர்தல் முறையை விரும்புவதாகவும் தெரியவருகிறது. ஜேர்மன் தேர்தல் முறையின்படி 60 சதவீதமான ஆசனங்கள் தொகுதிவாரியாகவும், 40 சதவீதமான ஆசனங்கள் விகிதாசார ரீதியிலும் நிரப்பப்படவேண்டும்.

இந்தநிலையில் இலங்கையில் புதிய தேர்தல் முறையொன்றை உருவாக்குவது குறித்து அனைத்துக் கட்சிகளும் இடம்பெறும் நாடாளுமன்றக் குழுவொன்றை அமைக்குமாறு கோரிக்கைகள் விடப்பட்டிருக்கின்றன.

பொருத்தமான தேர்தல் முறையை இந்தக்குழு தீர்மானித்த பின்னர் அரசியலமைப்புத் திருத்தம் குறித்து ஆராயலாம் எனவும் கட்சிகள் கருதுவதாகக் கொழும்புத் தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன. (01)

### இனந் தெரியாதோரால் தாக்கப்பட்டவர் மயக்கநிலையில்

இனந்தெரியாத நபர்களால் தாக்கப்பட்ட கட்டுடை மானிப்பாய் வாசி மயக்கமடைந்தநிலையில் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கடந்த 16 ஆம் திகதி மாலை இடம்பெற்ற இச்சம்பவத்தில் அதேயிடத்தைச் சேர்ந்த இராஜசிங்கம் ஜக்சன் ராஜ்குமார் என்பவரே மயக்கமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (60,46)

### கல்வியியல் கல்லூரியில் இன்று இறைமாட்சி வைபவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியில் இறைமாட்சி வைபவம் இன்று நடைபெறவுள்ளது.

இன்று காலை 9 மணிக்கு தேசிய கல்வியியற் கல்லூரியின் கட்டடத்தில் இவ்வைபவம் நடைபெறும்.

## அதாவுல்லா மீதான தடை 24 ஆம் திகதி வரை நீடிப்பு

(கொழும்பு)

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைமைத்துவம் உட்பட, நிறைவேற்று அதிகாரங்களுடைய பதவிகளை வகிப்பதற்கும் அவ்வாறான பதவிகளில் இருப்பதைத் தெரிவிப்பதற்கும் ஏ.எல்.எம். அதாவுல்லா உட்பட ஐந்து பேருக்கு எதிராக விதிக்கப்பட்ட தடை உத்தரவை எதிர் வரும 24 ஆம் திகதிவரை கொழும்பு மாவட்ட நீதிவான் நீடித்துள்ளார்.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தாக்கல் செய்திருந்த மனுவைப் பரிசீலித்த பின்னரே,

கொழும்பு மாவட்ட மேலதிக நீதிவான் இந்தத் தடை உத்தரவை நீடித்திருக்கின்றார்.

## அரச, தனியார் துறையினருக்கு மிக விரைவில் சம்பள உயர்வு!

### பொருளாதாரம் மேம்பட்டிருப்பதாக நிதியமைச்சர் அறிவிப்பு

(கொழும்பு)

அரசாங்க, தனியார்துறை ஊழியர்களின் சம்பளங்கள் அடுத்த நான்கு அல்லது ஐந்து மாதங்களில் அதிகரிக்கப்படும் என்று அரசாங்கம் அறிவித்துள்ளது.

வாழ்க்கைச் செலவு அதிகரிப்பைக் கருத்திற்கொண்டு இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக நிதி அமைச்சர் கே.என்.சொக்ஸி தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டு பொருளாதாரப் பின்னடைவு காரணமாக, சம்பளத்தை அதிகரிக்க முடியவில்லை. இந்த ஆண்டு பொருளாதாரம் திருப்தியான வளர்ச்சி கண்டிருப்பதால், சம்பளங்களைக் அதிகரிக்கக்கூடியநிலை இப்போது காணப்படுகின்றது.

வர்த்தக சங்கங்கள், தொழிற் சங்கங்கள் ஆகியவற்றோடு பேச்சுக்களை நடத்திய பின்பு, தனியார் துறையினருக்குச் சம்பள உயர்வு வழங்குவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று நிதி அமைச்சர் கே.என்.சொக்ஸி மேலும் தெரிவித்தார்.

முன்னைய அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட சம்பள ஆணைக் குழுவின் சிபார்சுகள் கவனத்தில் எடுக்கப்படமாட்டாது என்றும் -

பாவனைப் பொருட்களின் விலை உயர்வு குறித்துப் பரிசீலனை மேற்கொள்ள சிரேஷ்ட நிர்வாக உத்தியோகஸ்தர் புத்ததாச தலைமையில் குழுவொன்றைப் பிரதம மந்திரி நியமிக்கவுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

## மாநிலங்களை நிர்வகிப்பதற்கு சமஷ்டி முறையே மிகச் சிறந்த வழி

### ஐரோப்பிய யூனியன் நாடாளுமன்ற உறுப்பினர் கூறுகிறார்

சமஷ்டி அமைப்பு, மாநிலங்களை நிர்வகிப்பதற்கு மிகச்சிறந்த வழிமுறையாகும் என ஐரோப்பிய யூனியனின் நாடாளுமன்ற உறுப்பினர் நிரஞ்சன் ஹேவாதித்திய தெரிவித்திருக்கிறார்.

சமஷ்டி அமைப்பின் பிரகாரம் மாநிலங்களுக்குத் தேவையான அதிகாரங்களை மத்திய அரசாங்கம் பகிர்ந்தளிக்கும்.

பாதுகாப்பு, நிதி, வெளிநாட்டு உதவிகள் மத்திய அரசாங்கத்தின் கீழேயே இருக்கும். அமெரிக்கா, பெல்ஜியம், இந்தியா போன்ற நாடுகள் சமஷ்டி ஆட்சிமுறையையே கடைப்பிடிக்கின்றன.

அத்துடன், பல செல்வந்த நாடுகளும், வளர்ச்சியடைந்து வரும் நாடுகளும் இந்தச் சமஷ்டி முறையைப் பின்பற்றி மிகச் சிறந்த ஆட்சியை நடத்திவருகின்றன என அவர் மேலும் தெரிவித்தார்.

## கொழும்புத் துறைமுகத்தில் பிரெஞ்சுப் போர்க் கப்பல்

பிரான்ஸ் நாட்டுப் போர்க்கப்பலான 'மார்னே' நேற்றுமுன்தினம் கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்தது. இக்கப்பல் நாளைமறுதினம் வரை கொழும்புத் துறைமுகத்தில் தரித்து நிற்கவுள்ளதாகத் தெரியவருகின்றது.

கடந்த 11 ஆம் திகதி முதல் 15 ஆம் திகதிவரை மாலைதீவில் தங்கி நின்ற இக்கப்பல் நேற்று முன்தினம் கொழும்பு வந்தது.

158 மீற்றர் நீளமும் 22 மீற்றர் அகலமும் கொண்ட இக்கப்பல் 18 ஆயிரம் தொன் எடையுள்ளதாகும்.

லெப். கொமாண்டர் பியரே ஹென்றி பருவைக் கட்டளை அதிகாரியாகக் கொண்ட இக்கப்பலில் 13 அதிகாரிகள் உட்பட 177 கடற்படையினர் பணியாற்றுகின்றனர்.

கொழும்பில் தரித்து நிற்கும் போது பிரெஞ்சுக் கடற்படையினர் மற்றும் அதிகாரிகளுடன் இலங்கைக் கடற்படை அதிகாரிகள் பேச்சுக்களை நடத்துவர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இக்கப்பலில் பிரெஞ்சுக் கடற்படையின் இந்தியக் கடற்பகுதிக்கான தளபதி ரியர் அட்மிரல் ரிச்சட் வில்மோர் ரசலும் கொழும்பு வந்துள்ளார். இவர் வெளிவிவகார அமைச்சர் ரிரோன் பெர்ணான்டோவைச் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தியுள்ளார்.

## வட - கிழக்குக்கு மட்டுமல்ல முழு நாட்டுக்கும் உதவுங்கள்!

### வெளிநாட்டுத் தூதர்களிடம் பீரிஸ் கோரிக்கை

(கொழும்பு)

இலங்கையில் முன்னெடுக்கப்படும் சமாதான நடவடிக்கைகள் குறித்து விளக்கமளிக்கும் பொருட்டு, அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் வெளிநாட்டுத் தூதுவர்களை நேற்றுமுன்தினம் சந்தித்தார்.

சமாதான நடவடிக்கைகளுக்கும் இலங்கையின் அபிவிருத்திக்கும் உலக நாடுகள் துரிதமாக உதவிகள் வழங்கவேண்டுமென்றும் -

இவ்வாறு வழங்கும் உதவிகள் வடக்கு - கிழக்கிற்கு மட்டுப்படுத்தாமல் முழு நாட்டுக்கும் நன்மை ஏற்படுத்தும் வகையில் வழங்கப்படவேண்டும் என்றும் அமைச்சர் பீரிஸ் தூதுவர்களிடம் எடுத்துரைத்தார்.

இக்கூட்டத்தில் வெளிநாட்டுத் தூதுவர்கள் அமைச்சர் பீரிஸிடம் கேள்விகளைக் கேட்டபோது, அங்கிருந்த செய்தியாளர்கள் வெளியேற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## கடும்மழை காரணமாக அம்பாறையில் பெரு வெள்ளம்!

### 69 ஆயிரம் குடும்பங்கள் இடம்பெயர்ந்தன

தொடர்ந்து மூன்று நாட்களாகப் பெய்துவரும் கடும் மழை காரணமாக அம்பாறையில் பெரும் வெள்ள அனர்த்தம் ஏற்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்டத்தில் - மொத்தம் 69,304 குடும்பங்கள் தங்கள் இருப்பிடங்களைவிட்டு அகன்றுள்ளன. இவர்களில் 5363 குடும்பங்களது வீடுகள் சேதமடைந்துள்ளன.

இவ்வீடுகளில் 1064 குடும்பங்களது வீடுகள் முற்றாகச் சேதமடைந்துள்ளதாக - நேற்று முன்தினம் அம்பாறை மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றப் பிரதேச செயலர்களுக்கான மாநாட்டில் அம்பாறை மாவட்ட அரச அதிபர் தெரிவித்தார். (08)



புத்தளம் மதுரங்குளிப் பகுதியில் வேப்பமரத்திலிருந்து வடியும் கள்ளை வயோதிபர் ஒருவர் சேகரித்துக் கொள்வதைப் படத்தில் காணலாம்.

இந்த மரத்தில் இருந்து நாளாந்தம் 3 தொடக்கம் 4 போத்தல்வரை வேப்பங் கள் வடிகின்றமை குறிப்பிடத்தக்கது.

திருமதி சாந்தினி சிவநேசனின் நெறியாள்கையில்
நாடக அரங்கக் கல்லூரி வழங்கும்
ஆர்கொலோ சதுரர்
- நடன நாடகம்
இன்னும் இரு வாரங்களில்
STP Graphics
ஊடக அனுசரணை: நமது ஈழநாடு

## யாழ்.குடாநாட்டைப் பாதிக்கும் காய்ச்சல்

# சுகாதார அமைச்சு அதிகாரிகள் இரண்டு நாட்களாக ஆராய்வு!

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டு மக்கள் எதிர் நோக்கும் சுகாதாரப் பிரச்சினைகள் தொடர்பாக நேற்றுமுன்தினம் உயர் மட்டச் சந்திப்பொன்றில் ஆராயப் பட்டது.

குடாநாட்டுச் சுகாதார நிலைமை கள் தொடர்பாக ஆராயும் நோக்கு டன் யாழ்ப்பாணம் வந்திருந்த சுகா தார அமைச்சின் உயர் அதிகாரிகள் யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளரைச் சந்தித்து இங்குள்ள நிலைமைகள் தொடர்பாக ஆராய்ந் தனர்.

சுகாதார அமைச்சின் செயலா ளர் கலாநிதி றெஜி பெரேரா, மலேரி யாத் தடுப்புப் பிரிவுப் பணிப்பாளர் புன்சிறி பெர்னாண்டோ, மாகாண சுகாதாரப் பணிப்பாளர் குமாரவேலுப் பிள்ளை, அமைச்சின் உயர் அதிகாரி வி.ஜெகநாதன் ஆகியோரும,

யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் எஸ்.சதுர்முகன், பிராந் திய சுகாதாரப்பணிப்பாளர் உமா சிவபாதசுந்தரம் மற்றும் வைத்திய நிபுணர்களும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

இதேவேளை - குடாநாட்டில் பரவிவரும் தொற்று வைரஸ் காய்ச் சல் அதனைக் கட்டுப்படுத்துவதில் உள்ள பிரச்சினைகள் தொடர்பாக இக்குழுவினர் தொடர்ந்து நேற்றும் ஆராய்ந்திருந்தனர். (ச,கி)

# பிறர் வழிநடத்தலில் செயற்பட நான் ஒரு குழந்தையல்ல!

*கொழும்பு மாநகர துணைமேயர் அஸாத் சாலி தலைமையிலான குழு வினரின் யாழ்.விஜயத்துக்கு எதிர்ப் புத் தெரிவித்து யாழ்.மாநகரசபை முன்பாக நடத்தப்பட்ட கறுப்புப்பட் டிப் போராட்டத்தை அமைச்சர் மகேஸ்வரன் விமர்சித்ததாகக் கூறி, இதற்குப் பதிலளிக்கும் வகை யில் யாழ்.மேயர் செ.கந்தையன் அனுப் பியுள்ள கடிதத்தின் விபரம் இது -*

கடந்த 13.01.2003அன்று நடை பெற்ற யாழ்.மாநகராட்சி மன்ற முதல்வர், உறுப்பினர்கள், ஊழியர் களின் கறுப்புப்பட்டிப் போராட்டம்

## யாழ்.மேயர் செல்லன் கந்தையன்

சம்பந்தமாக 17.01.2003 அன்று தாங் கள் விடுத்திருக்கும் பத்திரிகைச் செய்தியில் யாழ். மாநகர சபை முதல்வர் ஆகிய நான், சமாதானத் தைக் குழப்பும் குழுக்களின் பிழை யான வழி நடத்தலில் செயற்படுவ



அமைச்சர் மகேஸ்வரன்

தாகக் குறிப்பிட்டிருந்தீர்கள்.

மாநகராட்சி மன்றத்தில் நடந்த போராட்டமானது ஒரு அரசியல் போராட்டமல்ல என்று தெரிவித்துக் கொள்வதுடன், ஜனநாயக மரபுப்படி, ஜனநாயக ரீதியாக நடைபெறும் தேர்தலில் மக்களால் தெரிவு செய் யப்பட்ட முதல்வர், அந்த நகரின் முதல் மனிதனாக மதிக்கப்படுவதே வழமை.

எனவே, அந்த குறிப்பிட்ட மாநக ராட்சிப் பிரதேசத்திற்குள் செய்யப் படும் எந்த ஒரு பொது வேலைத் திட்டமும் மாநகர முதல்வரின் முன் அனுமதியுடனும், அறிவுரையுடனும் செய்யப்படல் வேண்டும். இதனை அமைச்சரான தாங்கள் விளங்கிக் கொள்ளாமல் போனதனாலேயே சர்ச்சை எழுந்துள்ளது.

மேலும், யாழ்.மாநகராட்சி மன் றம் உருப்படியான வேலை ஒன்றும் செய்யவில்லையென்று குறிப்பிட்டி ருந்தீர்கள். தாங்கள் வடபகுதியில் இருந்து நியமனமான ஒரு அமைச் சர் என்றவகையில், அமைச்சராகத் தெரிவு செய்யப்பட்ட பின்பு ஒரு முறையாவது யாழ். மாநகரசபைக்கு விஜயம் செய்து மாநகரசபை நட வடிக்கைகள் பற்றி, குறைபாடுகள் பற்றி அறிந்திருக்கிறீர்களா?

1990 ஆம் ஆண்டுக்கு முன்பு எமது மன்றத்தில் 23 வட்டாரங்க ளுக்கும் தலா ஒவ்வொரு டிராக்டர் களும் அதைவிட 5 ரிப்பர்களும், பவுசர் ஒன்றும் இதர போக்குவரத் திற்குத் தேவையான வாகன வசதி களும் இருந்தன.

இன்று ஜீ.ரீ.இசற். நிறுவனத்தி னால் நீர் வழங்கல் பகுதிக்கு வழங் கப்பட்ட 4 டிராக்டர்களும், சுகாதாரப் பகுதிக்கு 3 டிராக்டர்களும் வேலைப் பகுதிக்கு 4 டிராக்டர்களும் மட் டுமே உள்ளன.

அத்துடன், அப்போது மன்றத் தின் சகல பகுதிகளின் வருமானமும் போதியதாக இருந்தமையால், சகல வேலைத்திட்டங்களும் எவ்வித தடங்கலுமின்றி நடைபெற்றன.

ஆனால், 1995 ஆம் ஆண்டு இடம்பெற்ற இடப்பெயர்வின்போது இங்கிருந்த சகல வாகனங்களும் காணாமற்போய்விட்டன. இந்நிலை யில் அப்போதிருந்த ஆணையாளர் பாலசிங்கம் தலைமையில் செயற் பட்ட நிர்வாகம் தனியாரின் வாகனங் களை வாடகைக்கு அமர்த்திக் குறைந்தளவான நிதி, ஆளணியுடன் செயற்பட்டது.

பின்னர் நடைபெற்ற உள்ளூராட் சித் தேர்தலில் தெரிவு செய்யப்பட்ட



யாழ். மாநகர முதல்வர் செல்லன் கந்தையன்

என்ற வகையில் என்னுடன் தொடர்பு கொண்டு எமது நிலைப்பாட்டை, எமது கருத்துக்களைச் சம்பந்தப்பட் டவர்களுக்குத் தெரிவிக்க இடமளித் திருப்பீர்களானால், நாம் தங்களது ஜனநாயக நடைமுறைகளை மீறும் நடவடிக்கைக்கு எதிராக ஒரு போராட்டம் நடாத்தும் நிலை ஏற்பட் டிருக்காது.

இப்போராட்டத்தைச் சகலரும் ஒன்றிணைந்து மேற்கொண்டோம் என்பது உண்மை. பிறருடைய வழி

## அமைச்சர் மகேஸ்வரனுக்குக் கடிதம்

சகல தமிழ்க் கட்சிகளையும் சேர்ந்த மக்கள் பிரதிநிதிகளை உள்ளடக் கிய சபை, கட்சி வேறுபாடுகளை மறந்து ஒரே மாநகராட்சி மன்றக் குடும்பம் என்ற ரீதியில் உத்தியோ கத்தர்கள், ஊழியர்களுடன் இணைந்து சகல பகுதிகளுக்கும் பாரபட்சமற்ற முறையில் சேவை யாற்றி வருகின்றோம்.

நீங்கள் குறிப்பிட்ட கரையோரப் பிரதேசங்களான கொழும்புத்துறை, குருநகர், பாஷையூர் போன்ற இடங் களில் பல பகுதிகள் இன்றும்கூட இராணுவப் பாதுகாப்பு வலயங்க ளாக உள்ளன. இப்பகுதிகளில் எமது நிர்வாகப் பணிகளை மேற் கொள்ள முடியாதநிலை காணப் படுகிறது.

இப்பிரதேசங்களில் எமது செயற் பாடுகளை மேற்கொள்வதற்கு யாழ். நகர இராணுவ அதிகாரிகளிடம் அனுமதிகோரி அனுப்பப்பட்ட கடி தங்களின் பிரதிகள் இந்த மன்றத் தில் இன்றும் உள்ளன.

இந்நிலையில் நாம் எதுவித செயற்பாடும் செய்யவில்லை எனத் தாங்கள் பத்திரிகைகளில் விடுத்தி ருக்கும் அறிவித்தலானது மக்கள் பிரதிநிதிகளான எம்மை மாத்திர மல்ல, மன்றத்தில் வேலை செய்யும் 1500 இற்கு மேற்பட்ட உத்தியோகத் தர்கள், ஊழியர்கள் அனைவரி னதும் மனதையும் புண்படுத்தும் ஒரு செயலாகவே அமைந்துள்ளது என்பதைத் தங்களுக்குச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

ஒரு அமைச்சர் என்ற ரீதியில் தாங்கள் சகல பகுதிகளுக்கும் சென்று பார்வையிட அதிகாரம் இருந்தாலும், சம்பிரதாயப்படி மக்கள் பிரதிநிதி, மாநகர முதல்வர் நடத்தலில் நான் செயற்படு வதற்கு நான் குழந்தை அல்ல. அனுபவமற் றவனும் அல்ல.

என்னுடைய அரசியல் வரலாற் றில் நான் எத்தனையோ நிர்வாகங்க ளையும், மாநகர முதல்வர்களையும் சந்தித்துள்ளேன்.

நான் ஒரு சாதாரண தொழிலா ளியாக இருந்து எனது அயரா உழைப்பு, ஒழுக்கம், கட்டுப்பாடு கார ணமாக இன்று முதல்வரின் நிலை க்கு உயர்ந்துள்ளேன். எனக்கும் தங்களுக்கும் தனிப்பட்ட கோபதாப ங்கள் கிடையாது.

ஆனால், கௌரவத்தைக் குறைக் கும் செயற்பாட்டில் தாங்கள் இறங் கியுள்ளதால் இத்தகைய ஜனநாயக ரீதியிலான எதிர்ப்பு நடவடிக்கை மேற்கொள்ளும் நிலைக்குத் தள் ளப்பட்டோம் என்பதைத் தெரிவித் துக்கொள்கிறேன்.

நான், மாநகரசபை வேலைத் திட்டங்கள் தொடர்பாகத் தங்களிடம் பல கோரிக்கைகளை விடுத்த போதும் தங்களிடமிருந்து எந்த விதமான பதிலும் கிடைக்கவில்லை.

எனவே, தாங்கள் இம்மன்றத் துக்கு ஒருமுறை விஜயம் செய்து எமது குறைபாடுகள், பற்றாக்குறை களை அறிந்து அவற்றை நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதன் மூலம்,

-எமது செயற்பாடுகளை மேம் படுத்தி, மக்களுக்கு வசதிகளை ஏற்படுத்த வகை செய்யுமாறு கேட் டுக் கொள்கின்றேன்.

*-இவ்வாறு யாழ். மாநகர மேயர் செல்லன் கந்தையன் அமைச்சர் மகேஸ்வரனுக்கு அனுப்பி வைத் துள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டி ருக்கின்றது.*

# ஏ - 9 வீதியின் மையத்திலிருந்து 66 அடிக்குள் கட்டடம் அமைக்காதீர்!

## பச்சிலைப்பள்ளிப் பிரதேச சபை உத்தரவு

பச்சிலைப்பள்ளிப் பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் வீதியின் மையத்திலிருந்து 66 அடிக்குள் புதி தாகக் கட்டடங்கள் அமைக்க வேண்டாம் எனப் பச்சிலைப்பள்ளிப் பிரதேச சபை கோரிக்கை விடுத்துள் ளது.

எழுதுமட்டுவாழ் தொடக்கம் ஆனையிறவு வரையிலான ஏ-9 வீதி யின் இருமருங்கிலும் மையத்திலி ருந்து 66 அடிக்குட்பட்ட பகுதிகளில் கட்டடங்கள் அமைப்பதையும், சுவர் கள் அமைப்பதையும் தவிர்க்கும்படி பச்சிலைப்பள்ளிப் பிரதேச சபைச் செயலாளர் சிவராசா கேட்டுள்ளார்.

இதை மீறுவோர் மீது சட்ட நட வடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (115)

# பன்றிக்கு வைத்த கட்டுத்துவக்கு வைத்தவரையே தாக்கியது

(கொழும்புத்துறை)

கட்டுத்துவக்குத் தவறுதலாக வெடித்ததில் முள்ளியவளையைச் சேர்ந்த செல்வநாயகம் தியாகலிங்கம் (வயது 34) என்பவர் படுகாயமடைந்தார்.

தனது கச்சான் தோட்டங்களை மேயும் பன்றிகளை இலக்கு வைத்துத் தயார்நிலையில் இவர் வைத்திருந்த கட்டுத்துவக்கு - தவறி வெடித்ததால் இவரது வலது காலில் படுகாயமேற்பட்டது.

காயமடைந்த இவர், முள்ளியவளை வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க் கப்பட்டுள்ளார். (60)


வாழ்க வளமுடன்

நமது ஈழநாட்டின் பிறந்தநாள் வாழ்த்துக்கள்

முதலாவது அகவையில்.

HAPPY BIRTHDAY



பெயர் : ச.துளசிகாஜினி
முகவரி: கண்டுவில் லேன், சாவகச்சேரி.

இரண்டாவது அகவையில்.



பெயர் : பி.நிஷங்கன்
முகவரி: 171/3, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

மூன்றாவது அகவையில்.



பெயர் : கே.அபிராமி
முகவரி: நோர்வே.

ஐந்தாவது அகவையில்.



பெயர் : நி.பிரசாந்தி
முகவரி: 104, இராமநாதன் வீதி, யாழ்ப்பாணம்.

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:------------------------------------

முகவரி:------------------------------------

பிறந்த ஆண்டு:------------------------------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப் பட்டுள்ளன.

-----------------
பெற்றார் ஒப்பம்

Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports

# ஆசிய ஜாம்பவான்களின் வீழ்ச்சியும் 'திடீர்' எழுச்சியும்



கடந்த சில மாதங்களாக ஆசிய கிரிக்கெட் ரசிகர்கள் மனதில் ஒரு வெறுப்பையும் மன உளைச்சலையும் கொடுத்தவர்கள் கடந்த உலகக் கோப்பைச் சாம்பியன்களாகிய இலங்கை, இந்திய, பாகிஸ்தான் அணியினர். ஒரு காலத்தில் வெற்றிவாகை சூடிய இந்த அணிகள் கடந்த சில மாதங்களாக டெஸ்ட் என்றால் என்ன? ஒரு நாள் போட்டிகள் என்றால் என்ன? தொடர் தோல்விகளையே சம்பாதித்து வந்தார்கள். இது வெளிநாட்டுக் கிரிக்கெட் ரசிகர்கள் மத்தியில் இருந்துவருகின்ற ஒரு கருத்தாகிய- ஆசிய அணிகள் எல்லாம் தங்களுடைய நாட்டு ஆடுகளத்தில்தான் வெற்றிவாகை சூடும் என்ற நிலைப்பாட்டுக்கு மேலும் உரமூட்டுவதாகவே அமைந்திருந்தது. இலங்கை, மிகவும் சிறந்த ஒரு முக்கோண ஒருநாள் போட்டித் தொடரில் இங்கிலாந்து மற்றும் அவுஸ்திரேலிய அணிகளுடன் ஆடி வருகிறது. அதேபோல, இந்திய அணியும் நியூசிலாந்து அணியுடன் ஒருநாள் போட்டித் தொடர் ஒன்றைச் சந்தித்தது. அதேபோலப் பாகிஸ்தானும் தென்னாபிரிக்க அணியுடன் சிறப்பான ஒருநாள் போட்டித்தொடரைச் சந்தித்தது. இம்மூன்று ஆசிய அணிகளும் உலகக்கோப்பைப் போட்டிகளுக்கு முன் பங்குபற்றும் ஒரு சிறப்பான பயிற்சி ஒருநாள் போட்டிகளே இவை என்றும் கூறலாம். இந்த மூன்று அணிகளும் பெரிதாகக் குறையேதும் கூற முடியாத அளவிற்கு ஆட்டக்காரர்களைக் கொண்டிருக்கின்றன. இலங்கை அணியைப் பொறுத்தமட்டில் சுழற்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் அணியில் இல்லை என்ற குறை இருக்கிறது. மேலும் - இலங்கை அணியின் துடுப்பாட்ட வரிசை சிறப்பாகவே உள்ளது. ஆனால், சில ஆட்டக்காரர்களின் அவசரம், அணியின் வெற்றியைக் கேள்விக் குறியாக்குகிறது என்றே கூறலாம். உதாரணமாக, அத்தப்பத்து சிலவேளைகளில் வேகப் பந்து வீச்சாளர்களின் பந்துவீச்சுக்கு முகங் கொடுக்கும்போது காட்டுகின்ற அவசரமும் தலைவர் சனத் ஜெயசூரியாவின் அதீதமான தலைமை உணர்ச்சியும் சிலவேளைகளில் அணியைக் குழப்பத்துக்குள்ளாக்கின்றன. இருந்தாலும் இலங்கை ரசிகர்கள் மத்தியில் மகிழ்ச்சியை உண்டு பண்ணிய போட்டியாக இறுதியாக இடம்பெற்ற அவுஸ்திரேலிய - இலங்கைக் கிரிக்கெட் போட்டியைக் குறிப்பிடலாம். இலங்கையும் அவுஸ்திரேலியாவும் கிரிக்கெட் உலகில் எலியும் பூனையும் போலவே உள்ளன. இந்த வெற்றி மூலம், இலங்கை அணி மீண்டும் ஒருநாள் போட்டி உலகை ஒரு வலம்வரும் என நம்பலாம். அதேபோல 7 ஒருநாள் போட்டித்தொடரில் நான்கு போட்டிகளில் சறுக்கிவிழுந்த இந்திய அணி ஐந்தாவது, ஆறாவது நியூசிலாந்து அணியினை வெற்றி வாகை சூடியது அந்த அணியினைப் பொறுத்த வரை ஒரு சிறந்த திருப்பம். இந்திய அணியின் வேகப் பந்து வீச்சாளர் ஷாகீர் கானின் அபாரப் பந்து வீச்சு நியூசிலாந்தின் கர்வத்தைக் குறைத்தது என்று கூறினால் மிகையாகாது.



இந்திய அணியைப் பொறுத்த வரை அந்த அணி பந்துவீச்சில் பெரும்பாலும் வேகப்பந்து வீச்சாளர்களுடனேயே உலகக் கோப்பைப் போட்டிகளில் களம் இறங்கப் போகின்றது என்பதில் ஐயமில்லை. ஆனால், தென்னாபிரிக்க ஆடுகளங்களைப் பொறுத்தவரையில் இந்திய அணியின் முடிவு மிகவும் சாலப் பொருத்தமானது. இந்திய அணிக்கு மிகவும் தேவையான ஊக்க மாத்திரை அணி ஒற்றுமை.

இறுதியாக, பாகிஸ்தான் அணி ஒரு பல்திறமைப் படை என்றே கூறலாம்.

அந்த அணி எல்லாவகையிலும் சிறப்பாக அமைந்துள்ள அணி, அதற்குரிய முக்கிய குறைபாடு அடிக்கடி தலைவர்கள் மாறுவது. பெரும்பாலும் சொகைப் அக்தார், வக்கார் யூனூஸ் ஆகியோர் தற்போது தென்னாபிரிக்க ஆடுகளங்களில் பந்துவீசுகிறார்கள். இது அவர்களுக்கு உலகக்கோப்பைப் போட்டிகளுக்கு முன் அமைகின்ற சிறந்த பயிற்சியாகும். ஆனால், அவர்களுடைய கட்டுப்பாடற்ற பந்துவீச்சுக்கள் அவர்களுடைய திறமையை மழுங்கடிக்கும் என்பதில் சந்தேகமில்லை.



வெள்ளைக்காரர்களால் மட்டந்தட்டப்பட்ட இந்த மூன்று ஆசிய அணிகளும் உலகக்கோப்பையை வென்ற அணிகள்தான். தற்போதும் குறைசொல்லாத அளவிற்குச் சிறப்பாகவே உள்ளன. இருந்தாலும் மனோதிடம், ஒற்றுமை, ஒருமைப்பாடு, போராடும் திறன் ஆகியன இருந்தால் மட்டுமே இவர்களுடைய உலகக் கோப்பைக் கனவு நனவாகும். ❖




பஞ்சநாதன் சுதர்சன்.

# தென்னாசியா ஒன்றாகட்டும்!



தென்னாசிய விளையாட்டுப் போட்டிகள் நடைபெறுமா? இல்லையா? - இதற்கான ஆயத்தங்கள் மற்றும் பயிற்சிகளை முழுவேகத்துடன் முடுக்கி விடுவதா? இல்லையா? - என்ற வினாக்களுக்கு விடை கிடைத்திருக்கிறது. இந்தியா தவிர்ந்த ஏனைய தென்னாசிய நாடுகள் கலந்து கொண்ட இது தொடர்பான குழுநிலைக் கூட்டம் ஒன்றில், பாகிஸ்தானில் நிச்சயம் தென்னாசிய விளையாட்டுப் போட்டிகளில் (SAF GAMES) நடைபெறும் என்று உறுதிப் படுத்தப்பட்டிருக்கிறது.

மார்ச் 28 ஆம் திகதி முதல் ஏப்ரல் 9 ஆம் திகதி வரை நடாத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ள இந்தப் போட்டிகள்- இந்தியா கலந்துகொள்கின்றதோ இல்லையோ - இனித் தடை எதையும் எதிர்நோக்கப் போவதில்லை. நடைபெற்ற கூட்டத்தில் இந்தியா கலந்துகொள்ளாமல் புறக்கணித்ததில் இருந்து அநேகமாகப் பாகிஸ்தானில் நடைபெறவிருக்கும் SAF GAMES-ல் இந்தியா கலந்துகொள்ளாது என்றே எண்ணத் தோன்றுகிறது என்கிறார் இலங்கைத் தேசிய ஒலிம்பிக் குழுவின் தலைவர் ஹேமசிறி பெர்ணான்டோ.

இரண்டு வருடங்களுக்கு முன்பே நடைபெற்றிருக்க வேண்டிய தென்னாசியப் போட்டிகள் பல்வேறு காரணங்கள் மற்றும் இந்தியாவின் புறக்கணிப்புப் பயமுறுத்தல் போன்றவற்றால் பிற்போடப்பட்டுக் கொண்டே இருந்தது. இருந்தும் இம்முறை எப்படியும் பாகிஸ்தானில் போட்டிகளை நடத்தியே தீருவது என்று தீர்மானித்துள்ளார்கள் போலத் தெரிகின்றது.

இதில் - இந்திய தடகள மற்றும் விளையாட்டு வீரர்கள் கலந்து கொள்ளாவிட்டால் அது மகிழ்ச்சிகரமானதாக விளையாட்டு ரசிகர்களுக்கு இருக்காது. விளையாட்டையும் அரசியலையும் ஒரு நேர்கோட்டில் யாருமே பார்க்க வேண்டாம் என்பதே விளையாட்டு ரசிகர்களின் வேண்டுகோள். அப்படியும் விடாப்பிடியாக நின்றால், பாதிக்கப்படப் போவதும் இழக்கப்போவதும் உயர்திறனைக் காட்டச் சந்தர்ப்பம் மறுக்கப்படும் விளையாட்டு வீரர்களும் இவர்களின் திறமையைக் கண்டுகளிக்க ஆர்வமுடன் இருக்கும் ரசிகர்களும்தான். ⁕

- சரண்யன்.



# ஊக்கமா? வேண்டாம்



தடகளப் போட்டிகள் என்றால் கூடவே வரும் இன்னொரு செய்தி தடைசெய்யப்பட்ட ஊக்க மருந்துப் பாவனையும், அதனால் தங்கப்பதக்கம் பறிக்கப்படுதல் போன்றனவாகும். தற்போது இன்னொரு துறை இந்தியாவில் இது பற்றிக் கவனம் செலுத்துகிறது. அது இந்தியக் கிரிக்கெட் விளையாட்டுத்துறை.

காரணம் - உலகக் கிண்ணப் போட்டிகள் நடைபெறவிருக்கும் தென்னாபிரிக்காவின் கடுமையான சட்டதிட்டங்கள் தற்போதைக்குக் கொள்கையளவில் - ஊக்கமருந்துப் பாவனைத்தடை தொடர்பில் அவுஸ்திரேலியா, தென் ஆபிரிக்கா, நியூசிலாந்து, இங்கிலாந்து ஆகிய கிரிக்கெட் விளையாடும் நாடுகள் ஒரு திட்டம் வைத்திருக்கின்றன. ஆனால் இந்தியாவில் இது பற்றிப் பேசப்படுவது இதுவே முதன் முறை. இந்திய அணி வீரர்கள் அனைவரும் ஊக்க மருந்துச் சோதனைக்கு உட்படுத்தப் படுவர் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறார்கள். இதற்குக் காரணம் இந்திய வீரர்கள் மீது கொண்ட சந்தேகம் அல்ல.

தெரிந்தும் தெரியாமல் ஏதாவது மருந்தை எடுக்கப்போய் அது ஏடாகூடமாகப் போய்விடக்கூடாதே என்ற முன்னெச்சரிக்கை நடவடிக்கையாகவேஇந்த நடைமுறை பின்பற்றப் படவுள்ளது. இதுபற்றி ஏற்கனவே வீரர்களுக்கு அறிவிக்கப்பட்டுவிட்டது.

ஏற்கனவே, தென்னாபிரிக்காவின் சட்டதிட்டங்களை ஐ.சி.சி. சுட்டிக்காட்டி, எல்லா நாட்டின் எல்லா வீரர்களும் ஊக்கமருந்துப் பாவனை தொடர்பான சோதனைக்கு உட்பட வேண்டுமென்று அறிவித்துவிட்டது.

இதேவேளைதான் - அறியாமல் எதுவிதமான மருந்தையும் சாதாரண வருத்தங்களுக்காகக்கூட உட்கொண்டு விடவேண்டாம் என்று இந்திய அணி மருத்துவர் அன்ரூ லீப்பஸ் இந்திய வீரர்களைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

- கண்ணன்.



இயற்கையான திறமைக்கு செயற்கை முகப்பூச்சு தேவை தானா...?

Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports

# குழப்புவதா வேண்டாமா என்ற போட்டியா?



உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிகளின் மொத்த ஆட்டங்களில்- ஆறு ஆட்டங்கள் நடைபெறப்போவது சிம்பாப்வே நாட்டில். இந்த ஆறு ஆட்டங்களிலும் பங்குகொள்ளப் போகும் நாடுகள் - நமீபியா, அவுஸ்திரேலியா, இந்தியா, நெதர்லாந்து, பாகிஸ்தான், இங்கிலாந்து.

இவற்றுள் - இங்கிலாந்து, அவுஸ்திரேலியா தவிர்ந்த ஏனைய நாடுகள் சிம்பாவே செல்வதில் எந்தத் தடங்கலையும் காணவில்லை. ஆனால், போகக்கூடாது, விளையாடக் கூடாது என்று கூடுதலாக இங்கிலாந்து



நஸார் ஹுசைன்.

அடம்பிடிக்கிறது. அவுஸ்திரேலியாவும் போகக்கூடாதுதான் என்பதைச் சிறிது அடக்கி வாசிக்கிறது.

இதேவேளை, இங்கிலாந்து அரசு "மணிகட்டும் வேலையை" அணி தீர்மானிக்கட்டும், கிரிக்கெட் அதிகாரிகள் தீர்மானிக்கட்டும் என்று நழுவப் பார்க்கிறார்கள். இதற்கு நஸார் ஹுசைன்- அரசு முடிவெடுக்கட்டும், அதன்படி நாங்கள்



சிம்பாப்வே ஜனாதிபதி முகாபே

போகாமல் இருக்கின்றோம். அல்லது போய் முகாபேயுடன் கைகுலுக்குகிறோம் என்று கூறியிருக்கிறார். இங்கிலாந்து அணியின் தெரிவாளர் குழுத் தலைவர்- மனச்சாட்சியின்படி முடிவுகள் எடுக்கப்பட வேண்டும் என்கிறார். ஆனால் இங்கிலாந்து கிரிக்கெட் சபை (ECB) அதிகாரி ரிம்லாம்ப் தடாலடியாக, எமது வேலை கிரிக்கெட் ஆட்டத்துடன் தொடர்புடையது. அரசியல் முடிவுகள் எடுப்பது எமது வேலையில்லை என்று பளிச்சென்று பதிலளித்திருக்கிறார்.

இதுஒருபுறமிருக்க - அவுஸ்திரேலியப் பிரதமர் ஹோவாட், நம் நாட்டு அணி சிம்பாப்வே போவதை நாங்கள் விரும்பவில்லை எனினும், அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபையின் விவகாரங்களில் நாங்கள் தலையிட விரும்பவில்லை என்கிறபோது- எங்கிருந்தோ முந்திரிக்கொட்டை போன்று நியூசிலாந்து சிம்பாப்வேக்குப் போகக்கூடாது என்று கேட்டுக்கொண்டிருக்கிறது.

இதில் இன்னொரு வேடிக்கை என்னவென்றால், சிம்பாப்வேயின் எதிர்க்கட்சித் தலைவரும் துள்ளியடித்துக் கொண்டு இங்கிலாந்து, அவுஸ்திரேலியா மற்றும் நாடுகள் சிம்பாப்வேக்கு வரக்கூடாதென்கிறார். ஏனெனில், றொபட் முகாபே- உலகக் கிண்ணப் போட்டிகள் சுமுகமாக நடைபெறுவதைக் காட்டி, தனது அரசிற்கு அங்கீகாரம் பெற்றுவிடுவார் என்று அவர் கருதுகின்றார். ஆனால்- சிம்பாப்வே அரசு வெள்ளையின ஏகாதிபத்தியக் கொள்கைகளை இன்னும் பற்றிப் பிடித்துக் கொண்டிருக்கிறது என்று இங்கிலாந்தைக் குற்றஞ்சாட்டுகிறது.

மறுவளமாக றொபட் முகாபே, சிம்பாப்வேயில் ஆட்டங்கள் நடைபெறுவதைத் தானே விரும்பவில்லை என்று ஒரு குண்டைத் தூக்கிப் போட்டிருக்கிறார். உலகக் கிண்ணக் கலகலப்புகளின் இடையே தன்னைக் கொல்லச் சதிகள் நடைபெறக்கூடும் என்று அவர் அச்சம் தெரிவித்திருக்கிறார். இந்தியா, பாகிஸ்தான் இரண்டும் ஏற்கனவே தாம் சிம்பாப்வே செல்வதில் எந்தத் தடையும் இல்லை என்று அறிவித்துவிட்டார்கள். ஐ.சி.சி. - சிம்பாவேயில் ஆட்டங்கள் நடாத்தியே தீருவோம். சிம்பாப்வேயில் யாருக்கும் எந்த ஆபத்தும் இல்லையென்று உறுதி கூறு கிறது. அதோடு இங்கிலாந்தின் கிரிக்கெட் சபை சார்ந்த ஒருவர் கருத்துக் கூறுகையில்,

சிம்பாவேயுடன் இங்கிலாந்து சர்வதேச வர்த்தகம் செய்யலாம். கிரிக்கெட்தான் விளையாடக் கூடாதா என்கிறார் எரிச்சலுடன். அதோடு அடுத்த வருடம் இங்கிலாந்தின் சிம்பாப்வேக்கான கிரிக்கெட் சுற்றுப்பயணத்தை முகாபே தடுத்தால் என்னாவது, உறவுகள் மேலும் கசப்படையுமே, மில்லியன்கள் கணக்கில் நட்டம் ஏற்படுமே என்றும் அங்கலாய்க்கிறார்கள்.

எல்லாவற்றுக்கும் முத்தாய்ப்பாக சிம்பாப்வேயின் அணித்தலைவர் ஹீத் ஸ்ரீக் வெள்ளையினத்தவர். இவரது தந்தை தன் பண்ணையை விட்டு வெளியேற மறுத்ததால் மூன்று நாள் சிம்பாப்வேயில் சிறையில் இருந்தவர். இவர் - இங்கிலாந்து, அவுஸ்திரேலிய அணிகள் சிம்பாப்வே வராவிட்டால் அது பெரும் இழப்பாகவும் துயரமாகவும் இருக்கும் என்கிறார். இங்கிலாந்து வராமல் விட்டுவிடக் கூடாது. அர சியலையும் விளையாட்டையும் ஒன்று கலக்கக் கூடாது என்று விநயமாக வேண்டிக்கொள்கிறார்.

தேர்தலில் முறைகேடுகள் செய்தமை, வெள்ளை இனமக்களைத் தம் இருப்பிடங்களில் இருந்து பலாத்காரமாக வெளியேற்றிக் கொண்டிருக்கின்றமை, எதேச்சாதிகாரமான ஆட்சிப் போக்கு என்றெல்லாம் சிம்பாப்வேயின் ஜனாதிபதி றொபட் முகாபேக்கு எதிராகக் குரல்கள் எழும்பிக் கொண்டிருக்கின்றன. இவற்றின் சரிபிழைகளையும் பற்றி முடிவுகள் கூறுவதை விட, இந்தப் பிரச்சினையில் அரசியல் வாடையே அசிங்கமாக வீசுகின்றது என்று துணிந்து கூறமுடியும். சிலவேளைகளில் அரசியல்வாதிகள் முந்திக்கொண்டு கருத்துக்கள் கூறி குழம்பியடித்திராமல், கிரிக்கெட் சபைகளிடம் மற்றும் ஐ.சி.சியிடமே விட்டிருந்தால் - இந்தப் பிரச்சினை கிரிக்கெட்



ஹீத் ஸ்ரீக்

ரசிகர்கள் மத்தியில் எந்தவித சாதக, பாதக கருத்தேற்றங்களையும் செய்யாது விட்டிருக்கும்.

என்றாலும் - நல்லதொரு திருவிழாவை நாசப்படுத்த முனையும் அசிங்கமான அரசியல் வாடையை ஏற்க முடியாமல் சர்வதேசக் கிரிக்கெட் ரசிகர்கள் நாசியைப் பொத்திக் கொள்கிறார்கள். ஒட்டுமொத்தத்தில் அரசியல் வாடையே இல்லாத விளையாட்டே எல்லோராலும் எதிர்பார்க்கப்படுகிறது. ◆

- நிர்மலன்.

# திமிரல்ல தன்னம்பிக்கை



நான் எந்தப் பந்து வீச்சாளனையும் கண்டு அச்சப்படவில்லை என்கிறார் வீரேந்தர் ஷேவாக். நியூசிலாந்தில் டெஸ்ட் ஆட்டங்களாயினும் சரி, ஒரு நாள் ஆட்டங்களாயினும் சரி சோபிக்க முடியாமற்போன இந்திய அணியின் இறுதிநேர நிம்மதிப் பெருமூச்சுக்குக் காரணமாக இருந்தவர் இவர். இவர் மட்டுமே இத்தொடரில் இரண்டு சதங்கள் அடித்தவர். எதிரணிப் பந்து வீச்சாளர்களின் மகத்துவம் பற்றிச் சிந்திக்கத் தொடங்கினால் துடுப்பாட்டம் சரிவராது. நான் எனது வழமையான அதிரடிப் பாணியிலேயே விளையாட விரும்புகின்றேன் என்னும் இவர், நேப்பியரில் எடுத்த 108 ஓட்டங்கள் ஆக்லண்டில் எடுத்த 112 ஓட்டங்கள் இரண்டும் மறக்கப்பட்ட இந்திய அணி வீரர்களில் இவரைச் சடுதியாக ரசிகர்கள் மனதில் முன்கொணர்ந்தன. நியூசிலாந்தில் இருபது முப்பது ஓட்டங்கள்கூட எடுப்பதற்குச் சிரமப்படும் களங்களில் விளையாடி இரண்டு சதங்கள் பெற்ற தன்னம்பிக்கையுடன் தன் தென்னாபிரிக்க உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிகளை எதிர்கொள்வதாகக் கூறுகிறார் ஷேவாக். தென்னாபிரிக்கக் களங்கள் வேகமானவை என்று எனக்குத் தெரியும். எனக்கு எந்தப் பதகளிப்பும் இல்லை. எனக்கு அவை சாதாரணமான ஆட்டங்களாகவே இருக்கப் போகின்றன. நான் நன்றாகவே விளையாடுவேன் என்கிறார். வித்தியாசம் வித்தியாசமான களங்களில் வீச்சாகத் துடுப்பெடுத்தாடப் பயிற்சி பெற்றுக்கொள்ள வேண்டும். இத்தகைய வேகமான தளங்களில் சிக்கவைக்க முயலும்போது அதனின்றும் விலகி ஓட்டங்களைப் பெறவேண்டும் என்கிறார் ஷேவாக்.



- நிமலா.

தனது ஓட்டம் குவிக்கும் ஆற்றலை மேம்படுத்த சச்சின் டென்டுல்கர் சில நல்ல ஆலோசனைகளைச் தனக்கெடுத்துரைத்ததாகக் கூறும் ஷேவாக், நியூசிலாந்து பந்து வீச்சாளர்களின் சரியான முறையான பந்து வீச்சைப் பாராட்டுகிறார். அவர்களின் வெற்றிக்குக் காரணம், தளம்பாத LINE AND LENGTH எனும் ஷேவாக், இப்படியாக பந்துவீசும்போது விக்கெட்டுக்கள் தாமாகவே பெறப்படும் என்றார். நியூசிலாந்து தொடரில் தனது முழுப் பாராட்டுக்களுக்கும் உரியவர் வேகப்பந்து வீச்சாளர் ட்ரல் ட.ஃபி என்றும் அவர் கூறுகிறார்.

# வீழ்த்துவதே இவர் விருப்பம்

VB ஒருநாள் கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் ஒரு ஆட்டத்தில் இங்கிலாந்தின் ஜிம்மி அண்டர்சன் முரளியின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தபோது, முரளி தன் கிரிக்கெட் வாழ்க்கையில் 300 ஆவது விக்கெட்டைப் பெற்று இன்னொரு மைல் கல்லைக் கடந்தார். அதாவது, டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டிகளில் 300 விக்கெட்டுகளுக்கு மேல் வீழ்த்திய உலகின் நான்காவது பந்து வீச்சாளனாக முரளி காணப்படுகின்றார்.

இவர் தனது 202 ஆவது ஒரு நாள் போட்டியில் 300 ஆவது விக்கெட்டைச் சரித்திருக்கிறார். அதோடு 78 டெஸ்ட் ஆட்டங்களில் இதுவரை 437 விக்கெட்டுகளை வீழ்த்தியிருக்கின்றார். இப்படியாக சாதனையை முரளிக்கு முன் நிகழ்த்தியவர்கள் பாகிஸ்தானின் வசீம் அக்ரம், வக்கார் யூனுஸ் மற்றும் இந்தியாவின் அனில் கும்ளே (சாதனை உபகண்டத்துக்குள் சுழல்கிறது)



இந்தச் சாதனை இன்னொரு வகையில் முரளிக்குச் சந்தோஷமாக இருந்திருக்கும். ஏனெனில் தொடக்கமாக VB சுற்றுப் போட்டியில் மூன்று ஆட்டங்களில் தோல்வியுற்ற இலங்கை அணி -முரளியின் சத்திரசிகிச்சையின் பின், தான் விளையாடிய இரண்டு ஆட்டங்களிலும் இலங்கை வென்றது. (சாதனை ஆட்டம் இரண்டாவது) முரளி பற்றி இலங்கைப் பயிற்றுநர் வட்மோர் கருத்துக் கூறுகையில், தொடர்ச்சியாக மூன்று ஒரு நாள் போட்டிகளில் தோல்வி கண்டோம். ஆனால் முரளி அணியில் விளையாடத் தொடங்கிய பின், அவர் விளையாடிய இரண்டு போட்டிகளிலும் வெற்றியடைந்திருக்கிறோம். இவரிடம் முடிவுகளை மாற்றும் ஒரு சக்தி இருப்பதை ஏற்றுக்கொள்ளலாம் அல்லவா என்கிறார். விஸ்டன் சஞ்சிகையின் தெரிவின்படி முரளியே டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் சிறந்த பந்து வீச்சாளர்.

தன்னைத் தூற்றிய அவுஸ்திரேலிய மண்ணில் இன்னொரு சாதனை புரிந்திருக்கிறார் முரளி. இதேவேளை, இன்று முந்நூறு விக்கெட் எண்ணிக்கையைக் கடக்கக் கூடியவர்கள் ஒரு சிலரைச் சுட்டிக்காட்டமுடியும். ஜவஹல் ஶ்ரீநாத், ஷேன் வோண், சக்லெய்ன் முஸ்டாக் ஆகியோர் முந்நூறை நெருங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

இதேவேளை அலன் டொனால்ட் (271), ஷோண் பொலொக் (260), கிளென் மக்ரா (255) மூவரும் இச்சாதனையை காலப்போக்கில் எட்டுவார்கள்.

எது எப்படியிருந்தாலும் முரளியின் சாதனைக்குத் தனியிடம். எப்போதுமே உண்டு. 500 ஆவது விக்கெட்டை வீழ்த்துவது என்ற இலக்குடன் இருக்கும் அவருக்கு சாதனைகள் வெகுதூரமில்லை.

தே. செந்தூரன்.

நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

சிந்தனைக்கு

பேதைமை என்பதுஒன்று யாதுஎனில் ஏதம்கொண்டு
ஊதியம் போக விடல். -திருக்குறள்

# நமது நோக்கு

## விஷமத்தனமும், சுயநலமும்

அண்மைக்காலமாகவே - ஏராளமான அரசியற் பிரச்சினைகளால் சூழப்பட்டிருக்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் - பேசிவரும் விடயங்கள் பெரும் சர்ச்சைகளையும் குழப்பங்களையும் ஏற்படுத்துவனவாகவே உள்ளன.

தாய்லாந்துப் பேச்சுவார்த்தைகளின்போது - முஸ்லிம் மக்களுக்கான தனியான பிரதிநிதித்துவம் பற்றி 'நேரம், காலம் தெரியாமல்' கதைத்து விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கத்திடம் 'வாங்கிக்கட்டிக் கொண்ட' சம்பவத்தைத் தொடர்ந்து-

நேற்று முன்தினமும் - நிலவரம் புரியாத கருத்தொன்றை அவர் வெளியிட்டுள்ளார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் ஜப்பானிய அரசாங்கத்தின் விசேட தூதுவர் யசுஷி அகாஷிக்கும் இடையேயான சந்திப்பில் - அகாஷியைச் சந்தித்த ரவூப் ஹக்கீம்-

யாழ்ப்பாணத்திலிருந்து 1990 ஆம் ஆண்டு வெளியேறிய முஸ்லிம் மக்கள் பாதுகாப்பு மற்றும் பொருளாதாரக் காரணங்களாலும் விடுதலைப்புலிகள் மீதுள்ள அச்சத்தினாலும் - தற்பொழுது நிலவும் சமாதானச் சூழ்நிலையிலும் அங்கு சென்று மீளக் குடியமரவில்லை எனத் தெரிவித்திருக்கிறார்.

இந்தக் கருத்தானது - உண்மை நிலையை 'முழுப் பூசணிக்காயை சோற்றில் மறைப்பதான' விவகாரமாக அமைந்துள்ளதோடு மட்டுமல்லாது - வேண்டுமென்றே திட்டமிடப்பட்ட வகையில் விரோத மனப்பான்மையை தூண்டிவிடவும் திரிபுபடுத்தவும் முயலும் 'சந்தர்ப்பவாதத்தை' எடுத்துக்காட்டுகின்றது.

தனக்கான அரசியல் தளத்தில் தனது நெருங்கிய சகாக்களினாலேயே ஓரங்கட்டப்பட்டு, தனது தலைமைத்துவத்தை உறுதியாகக் காத்துக் கொள்வதில் தளர்வு கண்டுவரும் ஹக்கீம் - தனக்கான பிரச்சினைகளை திசைதிருப்ப- பொறுப்பற்ற விதமாகவும், உண்மையை மறைத்து திரிபுபடுத்துவதாகவும் கருத்துக்களை வெளியிட்டு வருவது - வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டியதாகும்.

புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தாகியதன் பின்னர், யாழ்ப்பாணத்திற்கு முஸ்லிம் மக்கள் எவ்வித தங்குதடையுமின்றி வந்து குடியேறியதும், தமது வர்த்தக ஸ்தாபனங்களையும், மத நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருவதுடன் - தமிழ்மக்களுடன் மிகுந்த நட்புறவுச் சூழ்நிலையில் வாழ்ந்து வருவதுமான நிலையில் -

இவையனைத்துமே தெரிந்திருந்தும், ஜப்பானிய அரசாங்கத்தின் விசேட பிரதிநிதியிடம் - ரவூப் ஹக்கீம் தெரிவித்திருக்கும் கருத்துக்கள் விஷமத்தனம் நிரம்பியவையாகவே காணப்படுகின்றன.

ஏற்கனவே விடுதலைப் புலிகள், முஸ்லிம் மக்கள் மீண்டும் வந்து குடியேறுவதை மனப்பூர்வமாக ஆதரித்து வருவதோடு - இதுபற்றிப் பகிரங்கமாக தமது நிலைப்பாட்டினையும் அறிவித்து விட்டனர். அதே வேளை- முஸ்லிம் மக்கள் மீண்டும் தமது சொந்த வீடுகளுக்கு வருவதற்கு வேண்டிய சகலவிதமான அனுசரணைகளையும் அவர்கள் வழங்கி வருகின்றனர்.

இவ்வாறானதொரு சூழலில் ரவூப் ஹக்கீமின் இத்தகைய அறிவிப்பானது, தனக்கேற்பட்டுள்ள அரசியல் நெருக்கடிகளையும் பிரச்சினைகளையும் மறைத்து- இல்லாததொரு விவகாரத்தை பிரச்சினையாகக் கிளப்பி தனக்கு ஆதாயம் தேடமுயலும் செயற்பாடேயன்றி வேறல்ல.

அதேவேளை - இது தமிழ் மக்களுக்கும் முஸ்லிம் மக்களுக்கும் இடையேயான நல்லுறவையும் பாதிக்கும் தன்மையானதாகவும் அமைந்துள்ளது.

வெற்று அரசியல் ஆதாயத்துக்காக, தனது தலைமைத்துவத்தைக் காப்பதற்காக ரவூப் ஹக்கீம் மேற்கொள்ளும் இத்தகைய செயற்பாடுகளை முஸ்லிம் மக்கள் கண்டிக்க முன்வர வேண்டும்.

குறுகிய, சுயநலம் கொண்ட இத்தகைய தலைமைத்துவங்களினால் - இனநல்லுறவும் அமைதியும் சிதைக்கப்படுவதற்கு முஸ்லிம் மக்கள் அனுமதிக்கவும் கூடாது.

# சமாதான முயற்சியில் ஜப்பான் தலையீடு செய்யக்கூடாது!

### இந்தியப் பாதுகாப்பு ஆலோசகர் பிரஜேஷ் மிஷ்ரா தெரிவிப்பு

(புதுடெல்லி)

ஜப்பானிய அரசாங்கம் இலங்கையின் பொருளாதார அபிவிருத்தி மற்றும் உதவி வழங்கும் நடவடிக்கைகளுடன் தனது பணியை நிறுத்திக்கொள்ள வேண்டும்.

சமாதான முயற்சிகளில் ஜப்பானிய அரசாங்கம் இறங்கக் கூடாது என இந்திய பிரதமரின் பாதுகாப்பு ஆலோசகர் பிரஜேஷ் மிஷ்ரா தெரிவிக்கிறார்.

ஜப்பானிய விசேட தூதுவர் ஜசுஷி அகாஷியை புதுடெல்கியில் சந்தித்துப் பேசியபோதே அவர் இதனை நேரடியாகத் தெரிவித்திருக்கிறார். கடந்த புதனன்று இச்சந்திப்பு இடம் பெற்றது.

இதேவேளை, இந்தச் செய்தி குறித்து இந்தியத்தூதரக வட்டாரங்கள் தகவல் வெளியிடுகையில், இந்தியா இவ்வாறான தொரு கருத்தைத் தெரிவிக்கவில்லை என்று தெரிவித்துள்ளன.

# அல்லாரை வடக்கு படைமுகாமருகே மக்கள் மீளக் குடியமர அனுமதி!

மீசாலை - அல்லாரை வடக்கிலுள்ள இராணுவ முகாமுக்கு அருகில் மக்கள் மீளக்குடியமர அனுமதி வழங்கப்பட்டிருக்கின்றது.

இதுதொடர்பாக படையினர் அப்பகுதி கிராம அலுவலருக்கு அறிவித்திருக்கின்றனர். அல்லாரை வடக்கு இராணுவ முகாமுக்கு அருகில் மீளக்குடியமர்வதற்கும் அப்பகுதி மக்கள் பயன்படுத்துவதற்கான வீதி ஒன்றை திறந்து விடவும் தயாராக இருப்பதாகப் படையினர் கிராம அலுவலருக்கு அறிவித்துள்ளனர்.

மேற்படி பகுதிகளில் உள்ள இராணுவ முகாமை அகற்றி, அப்பகுதியில் இடம்பெயர்ந்துள்ள மக்களை மீளக்குடியமர அனுமதிக்குமாறும் கோரி அப்பகுதி மக்கள் மகஜர் ஒன்றை கடந்த 8 ஆம் திகதி- அரச அதிபர், போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு, 53 ஆவது பிரிவு கட்டளை அதிகாரி, இந்து கலாசார அமைச்சர், பாதுகாப்பு அமைச்சர், பலாலி இராணுவக் கட்டளை அதிகாரி ஆகியோருக்கு அனுப்பி வைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# யாழ். போதனா வைத்தியசாலையில் நுண்துளையிடல் சிகிச்சைகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் நுண் துளையூடான சிகிச்சை (லப்பரஸ் கோப்) ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மகப்பேறில்லாத பெண்களுக்கும் ஏனைய பெண்ணியல் நோயாளர்களுக்கும் இச்சிகிச்சை வழங்கப்படுகின்றது.

அண்மையில் ஆரம்பிக்கப்பட்ட நுண்துளையூடான சிகிச்சை மூலம் முப்பதிற்கும் மேற்பட்ட பெண்ணியல் நோயாளர்களுக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளதாகவும் அறியமுடிகின்றது.

இச்சிகிச்சை மூலம் மகப்பேறில்லாத பெண்களுக்கு, மகப்பேறில்லாததற்குரிய காரணங்களை இனங்கண்டு, அதற்குரிய பரிகார நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் என்பது குறிப்பிடத்தக்கது. (கி,ச)

# சர்வதேச மனித உரிமைகள் குழுவின் தலைவரும் பேச்சில்!

அரசுக்கும் புலிகளுக்குமிடையிலான அடுத்தகட்ட சமாதானச் சுற்றுப் பேச்சுவார்த்தையில் மனித உரிமைகள் சிறப்பாகக் கலந்துரையாடப்படும் என்று பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் குறிப்பிட்டார்.

அடுத்தமாதம் 7 ஆம் திகதி முதல் 10 ஆம் திகதி வரை 5 ஆம் கட்டப்பேச்சுவார்த்தை தாய்லாந்தில் இடம்பெறுகின்றது. இந்தப் பேசசுவார்த்தையில் சர்வதேச மனித உரிமைக்குழுவின் முன்னாள் தலைவர் பியன் மார்ஷல் கலந்து கொள்ள இருக்கின்றார் என்றும் பேராசிரியர் பீரிஸ் மேலும் தெரிவித்தார்.

# பெல்ஜியம் சமஷ்டி முறையே இலங்கைக்கு பொருத்தமானது

### பத்தேகம சமித்த தேரர் கருத்து

(கொழும்பு)

பெல்ஜியம் நாட்டில் இருப்பதுபோன்ற சமஷ்டி முறையே இலங்கைக்குப் பொருத்தமானதாக இருக்கும் எனத் தாம் கருதுவதாக பொதுஜன ஐக்கிய முன்னணியில் அங்கம் வகிக்கும் லங்கா சமசமாசக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் பத்தேகம சமித்த தேரர் தெரிவித்திருக்கிறார்.

நான்கு நாடுகளின் சமஷ்டி முறை குறித்து ஆராயச் சென்றிருக்கும் நாடாளுமன்ற உறுப்பினர் குழு முதலாவதாக பெல்ஜியத்துக்குச் சென்றிருக்கிறது. பெல்ஜிய சமஷ்டி முறை குறித்து ஆராய்ந்து கொண்டிருக்கும்போதே பத்தேகம தேரர் இக்கருத்தை வெளியிட்டிருக்கிறார்.

பெல்ஜியத்தில் மொழிவாரியான சமஷ்டியே இருக்கின்றது. இங்கு 70 வருடகாலமாக நடைமுறையில் இருக்கும் இந்த சமஷ்டி முறையான இன, மொழிப் பிரச்சினைகளுக்கு உகந்த தீர்வு எட்டப்பட்டிருக்கின்றது.

இனங்களுக்கிடையிலான பிரச்சினைகளுக்கு இந்த சமஷ்டி முறை மூலம் தீர்வுகாண முடியும் என்றும் பத்தேகம தேரர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

# சுகாதாரசேவை விஸ்தரிப்பு தனியார் நிறுவனம் உதவும்

சாமுவேல் அன் சன்ஸ் நிறுவனத்துடன் கியூமன் டயகனஸ்ரிக் ஆலோசனைப் பிரிவு, ஹெல்த்கெம் லிமிட்டெட் ஆகிய நிறுவனங்கள் இணைந்து சுகாதாரச் சேவைகளை விஸ்தரிப்புச் செய்யவுள்ளன. இதற்கான ஆரம்ப வைபவம் தைப்பொங்கல் தினத்தன்று சாமுவேல் அன் சன்ஸ் லிமிட்டெட்டில் நடைபெற்றது.

52 வருடங்களாக யாழ்ப்பாணத்தில் இயங்கி வருகின்ற தமது நிறுவனம் சீர்குலைந்து போயுள்ள யாழ்.குடாநாட்டில் சுகாதார சேவைகளை விருத்தி செய்து புதிய திட்டங்களை மேற்கொள்ளவுள்ளதாக சாமுவேல் அன் சன்ஸ் நிர்வாக இயக்குநர் டேவிட் செல்வரட்ணம் தெரிவித்தார்.

சுகாதாரச் சேவைகளை மேம்பாடு செய்யும் வகையில் மருத்துவ ஆய்வுகூட உபகரணங்களை- யாழ்.போதனா வைத்தியசாலை, மானிப்பாய் கிறீன் ஞாபகார்த்த வைத்தியசாலை மற்றும் கிளிநொச்சி பொன்னம்பலம் ஞாபகார்த்த வைத்தியசாலை ஆகியவற்றுக்கு சாமுவேல் அன் சன்ஸ் வழங்கவுள்ளது.

அவற்றுடன் பொறியியல் துறையையும் விஸ்தரிக்க சுவிஸிலிருந்து நிபுணத்துவம் வாய்ந்தவர்களை அழைத்து இங்குள்ள பொறியியலாளர்களுக்குப் பயிற்சிகளும் வழங்கப்படவுள்ளன.

# கொக்கோ கோலா அருந்திய 14 வயதுச் சிறுவன் மரணம்!

### விசாரணைக்கு அமைச்சர் உத்தரவு

(கொழும்பு)

கொக்கோ கோலா அருந்திய சிறுவன் ஒருவன் உயிரிழந்த சம்பவம் தொடர்பாக வர்த்தக அமைச்சர் ரவி கருணாநாயக்க விசாரணைகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

14 வயதான டில்ஷான் என்ற சிறுவனே கொக்கோ கோலா அருந்தியதையடுத்து சுயநினைவற்ற நிலையில் ராகம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர், தனியார் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மரணமானார்.

இது தொடர்பாக விசாரணைகளை நடத்துமாறு அமைச்சர் ரவி கருணாநாயக்க அதிகாரிகளுக்கு உத்தரவிட்டிருக்கிறார். இச்சிறுவனுக்கு 5 வயதில் சிறுநீரகநோய் ஏற்பட்டதைவிட வேறெந்த நோயும் ஏற்படவில்லை என்றும் பாடசாலைக் கிரிக்கெட் அணியில் இடம்பெற்றிருந்தவர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

# மர்மப்பொருள் வெடித்து! இயக்கச்சியில் ஒருவர் காயம்

இயக்கச்சி, பளையில் மர்மப் பொருள் வெடித்து ஒருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதேயிடத்தைச் சேர்ந்த மு.நாகமுத்து (வயது 65) என்பவரே வீட்டுக் கூரையில் இருந்து விழுந்து மர்மப்பொருள் வெடித்ததினால் காயமடைந்தவராவார். (115)

# வானொலி உபகரண இறக்குமதி சர்ச்சை;

# வேகத்தை குறைத்த நோர்வே பிரதமர் கடிதம்

தமிழீழ விடுதலைப் புலிகளின் "புலிகளின் குரல்" வானொலிக்காக தருவிக்கப்பட்ட உபகரணங்கள் தொடர்பாக எழுந்திருந்த வாதப் பிரதிவாதங்கள் கடந்த வாரத்தில் முக்கிய திருப்புமுனையுடன் அமைதி



லக்ஷ்மன் கதிர்காமர்

யடைந்துள்ளன. நோர்வேப் பிரதம மந்திரி "பொன்டவிக்" ஜனாதிபதிக்கு அனுப்பிவைத்த பதிலுடன் இந்த விடயம் பற்றிய சர்ச்சைகளின் வேகம் குறைந்திருக்கிறது.

ஜனாதிபதியின் கேள்விக்கு நோர்வேப் பிரதம மந்திரி வழங்கியிருந்த பதில், இராஜதந்திர ரீதியில் அணுகப்பட்டிருந்தமை ஜனாதிபதியையே சற்றுச் சிந்திக்க வைத்தது. எனினும், இலங்கையில் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தை உங்களின் அரசாங்கம் என நோர்வே பிரதமர் விளித்திருந்தமை ஜனாதிபதிக்குச் சந்தோஷத்தை ஏற்படுத்தியிருந்தது.

அத்துடன், இதற்கு மேலும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கான வானொலி உபகரணம் தொடர்பாக நோர்வேயுடன் பேசிப் பயனில்லை என்ற நிலைப்பாட்டைப் பொதுஜன ஐக்கிய முன்னணிக்கும் ஏற்படுத்தியுள்ளது. ஜனாதிபதிக்கான இந்த பதில் நோர்வேப் பிரதமரால் அனுப்பப்பட்டிருந்தபோதும், அதனை வடிவமைத்தது ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும், அமைச்சர் மிலிந்த மொறகொடவுமே எனப் பொதுஜன ஐக்கிய முன்னணி கருதுகிறது.

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கான வானொலி உபகரணம் தொடர்பில் நோர்வேத் தூதுவர் ஜோன வெஸ்பேர்க்கை நாட்டிலிருந்து அனுப்புவது சாதகமற்ற நிலைக்கு வழிவகுத்துவிடும் என்ற எண்ணம் பிரதமரின் உள்ளத்தில் ஏற்படவே, அவர் மிலிந்த மொறகொடவை உாய பணிக்காக அழைத்தார்.

இதனடிப்படையில், மிலிந்த வழங்கிய ஆலோசனைக்கு அமையவே நோர்வேப் பிரதம மந்திரி ஜனாதிபதிக்குப் பதில் அனுப்பினார் எனப் பொதுஜன ஐக்கிய முன்னணி கருதுகிறது.

இதேவேளை, நோர்வேயின் இந்தப் பதிலுக்கு, அந்த முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினரும், ஜனாதிபதியின் சர்வதேச ஆலோசகருமான லக்ஷ்மன் கதிர்காமர் மாற்று விடயம் ஒன்றையும் தயாரித்து வருகிறார்.

✪ வெளிநாட்டு அரசாங்கம் ஒன்று இலங்கையின் ஜனாதிபதியை, அரசாங்கத்தின் தலைவராகக் குறிப்பிட்டிருப்பது,

✪ தமிழீழ விடுதலைப் புலிகளுக்கான வானொலி உபகரணம் தொடர்பான விளக்கம் இலங்கை அரசாங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் இருப்பதாக நோர்வேயின் பதிலில் குறிப்பிடப்பட்டிருப்பதைக் கொண்டு,



அரசாங்கச் செலவிலேயே, அரசாங்கத்துக்கு வேட்டு வைக்கும் சரத் அமுனுகம வும் நிமால் ஸ்ரீபால டி சில்வாவும்.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு வானொலி உபகரணங்களை இறக்குமதி செய்வதில் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கமே முன்னின்று செயற்பட்டுள்ளது என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக லக்ஷ்மன் கதிர்காமர் கூறுகிறார்.

இதைக்கொண்டு அரசாங்கத்தின் மீது ஜனாதிபதி தமது அதிகாரத்தைப் பயன்படுத்தமுடியும் என லக்ஷ்மன் கதிர்காமர் ஜனாதிபதியிடம் கூறியிருக்கும் இந்தக் கருத்தை ஏற்றுக்கொண்ட ஜனாதிபதியும், சம்பந்தப்பட்ட வானொலி உபகரண விடயத்தின் மூலம் இலங்கையின் இறைமைக்கு ரணில் விக்கிரமசிங்க பங்கம் ஏற்படுத்தியுள்ளதாகவும், இது குறித்து ஆராயுமாறும் லக்ஷ்மன் கதிர்காமருக்குப் பணித்துள்ளார்.

இதன்மூலம் பிரதம மந்திரி ரணில் விக்கிரமசிங்கவை பதவியிலிருந்து விலக்க முடியுமா என்பது தொடர்பாகவும் கருத்தைச் சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி சந்திரிகா, லக்ஷ்மன் கதிர்காமரிடம் கேட்டுள்ளார்.

இதற்கிடையில், பொதுஜன ஐக்கிய முன்னணியின் நிறைவேற்றுக் குழுக் கூட்டம் கடந்த திங்கட்கிழமை கூடியது. இதில் எதிர்பார்த்ததைப் போல, எவரும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் ஜனதா விமுக்தி பெரமுன எனப்படும் மக்கள் விடுதலை முன்னணிக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகள் தொடர்பாக கேள்வி எழுப்பவில்லை.

இந்தக் கூட்டத்தில் ஜனாதிபதி மிகவும் உறுதியான கருத்தொன்றை வெளியிட்டார். பொதுஜன ஐக்கிய முன்னணி எதிர்வரும் மார்ச் அல்லது ஏப்ரல் மாதமளவில் மாற்று அரசாங்கம் ஒன்றை நிறுவும் என்ற உறுதியே அதுவாகும்.

இலங்கையின் பொருளாதார பிரச்சினையைத் தீர்த்துக்கொள்ள முடியும். ஆனால், ஐக்கிய தேசிய முன்னணியின் சமாதான முன்னகர்வின் அடிப்படையில் போருக்குத் தீர்வு இல்லையென ஜனாதிபதி சந்திரிகா அக்கூட்டத்தில் குறிப்பிட்டிருந்தார்.

இதனிடையே, சிலாபத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசிய அமைப்பாளர் கே.ஏ.பாயிஸைக் கொலை செய்யத் திட்டமிட்ட 11 பேர் கைது செய்யப்பட்டிருக்கின்றனர். இவர்களில் மூவர் வடக்கு-கிழக்கில் இயங்கும் தமிழ்க் குழுவொன்றின் உறுப்பினர் எனச் சிலாபம் பொலிஸார் தெரிவித்திருந்தனர்.

இந்த நிலையில், சம்பந்தப்பட்ட கொலைத் திட்டத்தை மாற்றும் முயற்சி ஒன்றும் நிகழ்த்தப்பட்டது. அதாவது, முஸ்லிம் காங்கிரஸின் தேசிய அமைப்பாளரை மட்டுமல்லாது, முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீமையும் இந்தக் குழு கொலை செய்யத் திட்டமிட்டதாக ஊடகங்களில் செய்தி வெளியானது.

எனினும், இதில் எந்தளவு உண்மை இருந்தது என்பதைக் காட்டிலும், அந்தத் தாக்குதல் திட்டத்தில் இருந்ததாகக் குறிப்பிடப்பட்டிருந்த மூன்று வடபகுதித் தமிழ்க் குழுவைச் சேர்ந்தவர்களும் சமாதானப் பேச்சுவார்த்தைக்கு எதிரான குழுவைச் சேர்ந்தவர்கள் எனப் படைத் தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

இந்தக் கொலைத் திட்டம் உணமையா அல்லது சோடிக்கப்பட்டதா என்பதைவிட - ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ரவூப் ஹக்கீம் தரப்புக்கு ஓரளவான அனுதாப அலையைப் பெற்றுத்தந்திருப்பது குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய விடயமாகும்.

இதேவேளை -

கொள்ளலாம்.

இந்தநிலையில், ஐக்கிய தேசிய முன்னணி என்ன செய்கிறது?



சந்திரிகா

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் தமது ஒருவருட ஆட்சிக் காலத்தைக் கடந்துள்ளது.

எனினும், தேர்தல் வாக்குறுதிகள் தொடர்பாக வாக்காளர்களுக்கு அந்த முன்னணியினால் திருப்தியளிக்கக் கூடியவகையில் செயற்பட முடியவில்லை.

சமாதானம் என்ற நிலைப்பாட்டுக்குள் இருந்துகொண்டு ஐக்கிய தேசிய முன்னணியினால் நாட்டில் பொருளாதாரத்துறைகளில் முக்கிய கவனத்தைச் செலுத்த முடியவில்லை. யுத்தத்தினால் நாடு எதிர்நோக்கியுள்ள கடன் பளுவும் இதற்குப் பிரதான காரணமாகும்.

இருந்தபோதும் நிலைமையைச் சர்வதேச நாடுகளின் ஒத்துழைப்புடன் முன்னகர்த்திச் செல்வதில் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் இதுவரை வெற்றி கண்டிருப்பதை ஏற்றுக்கொள்ளவே வேண்டியிருக்கிறது.

## தெற்குத் திசையினிலே

## கொழும்பிலிருந்து இந்திரஜித்

இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாகச் சமஷ்டிமுறையை விளங்கிக்கொள்வதற்காக நாடாளுமன்றக் குழு ஒன்று ஐரோப்பிய விஜயத்தை மேற்கொண்டுள்ளது. இந்தக் குழுவில் ஜனதா விமுக்தி பெரமுனவைத் தவிர்ந்த அனைத்துக் கட்சிகளைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களும் உள்ளடங்கியுள்ளனர்.

எனினும், பொதுஜன ஐக்கிய முன்னணியைப் பிரதிநிதித்துவப்படுத்திச் சென்றுள்ள இருவர், தமது நோக்கங்களையும் நிறைவேற்றிக் கொள்வதில் தீவிரமாகச் செயற்பட்டு வருகின்றனர்.

பொதுஜன ஐக்கிய முன்னணியின் சார்பில் இந்தக் குழுவில் உள்ளடக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள் சரத் அமுனுகம மற்றும் நிமால் சிறிபால டி சில்வா ஆகியோர் சமஷ்டி குறித்த தெளிவைப் பெறும் அதேநேரம், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் வளர்ச்சி தொடர்பாக ஐரோப்பாவில் வாழும் இலங்கைச் சமூகத்தவரை சந்தித்துப் பேசவிருக்கின்றனர்.

இலங்கையில் தமது கட்சியின் கொள்கைகளுக்கு எதிராக ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் செயற்பட்டு வருவதாகவும், நாட்டின் இறைமைக்குப் பாதகம் ஏற்படக்கூடிய வகையில் அது நடந்து கொள்வதாகவும் இவர்கள் பிரசாரங்களை மேற்கொள்ளவிருக்கின்றனர்.

பிரான்ஸ் மற்றும் நியூயோர்க் ஆகிய இடங்களுக்குச் செல்லும் இவர்கள் இருவரும், நாளை திங்கட்கிழமை ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளைச் சந்திக்கவிருக்கின்றனர்.

அரசாங்கச் செலவிலேயே சென்று, அரசாங்கத்துக்கு எதிரான செயற்பாடுகளின் மூலம் கூடிய பயன்களைப் பெற்றுக்கொள்ளவே இந்தத் தடவை பொதுஜன ஐக்கிய முன்னணி முயற்சிக்கிறது என இதை எடுத்துக்

பொருட்களின் விலை உயர்வுகள் அரசாங்கத்தை ஆட்டிப்படைக்கின்றது எனினும், இந்த வருடத்துக்குள் தாம் பொருட்களின் விலைகளைக் குறைக்கமுடியும் என அரசாங்கம் நம்பிக்கை தெரிவித்துள்ளது. அதனடிப்படையில் நாடு முழுவதிலும் மக்கள் மத்தியில் பிரசாரங்களை அரசாங்கம் கடந்த வெள்ளிக்கிழமை முதல் முன்னெடுத்துவருகிறது.

கோதுமை மாவின் விலை உயர்வானது மலையக மக்களைப் பொறுத்தவரையில் பாரிய பாதிப்பை ஏற்படுத்தியிருப்பதாக இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கூறியுள்ளது. இது தொடர்பாக அமைச்சர் தொண்டமானுக்கும், அமைச்சர் ரவி கருணாநாயக்கவுக்கும் இடையில் அண்மையில் முறுகல்நிலை ஒன்றும் ஏற்பட்டதாக நாடாளுமன்றத் தரப்புக்கள் தெரிவித்திருந்தன.

இந்தநிலையில், அமைச்சர் தொண்டமான் கடந்த வாரத்தில் தமது அமைச்சின் அதிகாரிகளைப் பதவிவிலகுமாறு பணிப்புரை விடுத்திருந்தார். இதன் பின்னணியில் பல்வேறு கதைகள் சொல்லப்பட்டபோதும், தமது பணிப்புரைக்கு இணங்காத அதிகாரிகளை அகற்றுவதே இந்தப் பதவி அகற்றலின் நோக்கமாகும் என்பது தெளிவு.

இது இவ்வாறிருக்க, தென்னிலங்கை அரசியலில் மாற்றங்களைக் கொண்டுவரலாம் என எதிர்பார்க்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஜனதா விமுக்தி பெரமுன (மக்கள் விடுதலை முன்னணி) கூட்டுக் குறித்த பேச்சுவார்த்தை நாளை திங்கட்கிழமை இடம்பெறவிருக்கிறது.

இதில் இரண்டு கட்சிகளும் இணைந்து செயற்படுவது தொடர்பாக இறுதி முடிவு எட்டப்படலாம் எனவும் எதிர்பார்க்கிறார்கள். ஏனெனில் இரண்டு கட்சிகளினதும் உயர் தலைவர்கள் கூட்டணி குறித்து தீவிரமான கருத்துக்களை தெரிவித்து வருகின்றனர். ◆

# அடிப்படை வசதிகளற்ற நிலையில்

# டச்சுக்கோட்டை வட்டார மக்கள்

யாழ்.மாநகரசபைப் பிரிவுக்குள் உள்ளடங்கிய டச்சுக்கோட்டை முதலாம் வட்டார மக்கள் இடம்பெயர்ந்து, அடிப்படை வசதிகளற்ற நிலையில் வாழ்ந்து வருகின்றனர்.

1983 ஆம் ஆண்டு தொடக்கம் நாட்டில் ஏற்பட்ட அனர்த்தங்கள், போர் நடவடிக்கைகளினால் மேற்படி வட்டார மக்களின் குடியிருப்புக்கள் முற்றுமுழுதாக அழிக்கப்பட்டன. சொத்துக்கள் அனைத்தையும் இழந்து உறவுகளைப் பிரிந்த நிலையிலும், இன்றுவரை இடம்பெயர்ந்தவர்களாகவே அவர்கள் வாழ்கின்றனர்.

இவ்வட்டார மக்களின் நன்மை கருதி அப்பகுதிப் பொது அமைப்புக்களால் பின்வரும் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டிருகின்றன.

✦ இவ்வட்டார மக்களின் குடியிருப்புக்களின் அழிவுகள், சொத்துக்களின் இழப்புக்கள் ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு பாதிக்கப்பட்ட பின்தங்கிய வட்டாரமாக இதைப் பிரகடனப்படுத்த வேண்டும்.

✦ புனரமைப்பு நடவடிக்கைகளுக்கு முன்னுரிமை வழங்கி, இவ்வட்டார மக்களுக்கான மலசலகூடம்

## செய்திக் கட்டுரை



அமைத்தல்; குடிதண்ணீர் வசதி, வீடமைப்பு, வீதிகள் புனர்நிர்மாணம் செய்தல், மின்சார இணைப்பு ஆகிய திட்டங்களுக்குச் சர்வதேச சமூகம் வழங்கும் உதவித் திட்டத்திலிருந்து யாழ். மாவட்ட அபிவிருத்திக்குழு, அரசசார்பற்ற நிறுவனங்கள் அல்லது புனர்வாழ்வு அமைச்சு மேற்கொள்ள வேண்டும்.

✦ கடந்த ஆறு மாதங்களுக்கு முன்னர், 512 ஆவது படைப்பிரிவு இராணுவக் கட்டளை அதிகாரியினால் இவ்வட்டாரத்தில் மீளக்குடியமர அனுமதி வழங்கப்பட்டபோதிலும், அடிப்படை வசதிகள் ஏதும் அங்கு இல்லாததால் மக்கள் அங்கு குடியமரமுடியாது ஏழ்மையில் வாழ்கின்றனர்.

எனவே, கூடியவிரைவில் இவ்வட்டாரத்தில் மக்கள் மீளக்குடியமர்வதற்கு உறுதியான நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும்.

✦ இவ்வட்டாரத்திலிருந்து இடம்பெயர்ந்து வாழும் மக்களுக்குத் தற்பொழுது வழங்கப்பட்டுவரும் உலர் உணவு விநியோகத்தை எக்காரணத்தைக் காட்டியும் நிறுத்திவிடக் கூடாது எனவும்,

பொது அமைப்புக்களால் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

இந்தக் கோரிக்கைகள் அரச மற்றும் அரசசார்பற்ற அமைப்புக்களின் கவனத்தில் எடுக்கப்பட்டு, பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண வழிவகை செய்யப்பட வேண்டும்.

இதன் மூலமே - சுமார் இரண்டு தசாப்தங்களாக இடம்பெயர் வாழ்வை வாழும் டச்சுக் கோட்டை வட்டார மக்களுக்கு ஓரளவுக்காவது நிம்மதியைப் பெற்றுக் கொடுகக முடியும். இதனை கவனத்திலெடுத்து அரச, அரசசார்பற்ற அமைப்புக்களின் அதிகாரிகள் செயற்படுவர்களா?

- என்.ஹெயின்ஸ்

# அரசியல் அமைப்பில் மாற்றம் புலிகள் விரும்பியபடி நடக்கும்

## அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் அறிவிப்பு

(கொழும்பு)

புலிகள் விரும்புவது போன்ற தெ[illegible] அரசியலமைப்பை தயாரிக்க அரசாங்கம் முயற்சி செய்யும் என்று அரசியலமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவி[illegible]ருக்கிறார்.

புலிகள் தற்போதுள்ள அரசியலமைப்பு மாற்றியமைக்கப்படுவதை விரும்புகின்றனர். இதனால் புலிகள் விரும்பக்கூடிய ஒரு அரசியலமைப்பை உருவாக்குவது குறித்து அரசாங்கம் பரிசீலனை செய்து வருகின்றது.

இதனையொட்டியே எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களை அரசாங்கம் வெளிநாடுகளின் சமஷ்டி அமைப்புக்குறித்து ஆராய அனுப்பி வைத்துள்ளது. ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்றுள்ள இக்குழு பிரச்சினையை முழுமையாக விளங்கிக்கொள்ளும் என நம்புவதாகவும் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் மேலும் தெரிவித்திருந்தார்.

# பாடல் தெரிவு நிகழ்ச்சியை பி.பி.சி இடைநிறுத்த முடிவு

பி.பி.சி பாடல் தெரிவு நிகழ்ச்சியை இடைநிறுத்த பி.பி.சி நிறுவனம் முடிவு செய்துள்ளது. பி.பி.சி பாடல் தெரிவில் ஈழத்துப்பாடலான 'பூவும் நடக்குது பிஞ்சும் நடக்குது' என்[illegible] பாடல் ஐந்தாவது பாடலாகத் தெ[illegible]ாகியிருந்தது.

இதுகுறித்து இலங்கைத் தூதரகம் பி.பி.சியிடம் விளக்கம் கோரியிருந்தது. இதையடுத்தே பி.பி.சி இ[illegible] பாடல் தெரிவு நிகழ்சியினை இடைநிறுத்த முடிவுசெய்துள்ளது.

அத்துடன்- இதில் நேயர்களின் வாக்குகளின் அடிப்படையிலேயே தெரிவு செய்யப்பட்டதாகவும் தமது விருப்பு வெறுப்புக்கள் எதுவும் இதில் இல்லையெனவும் பி.பி.சி கூறியுள்ளது.

அதேவேளை- இனிமேல் ஒரு கணினியிலிருந்து ஒரு வாக்கை மட்டும் வழங்கக்கூடியதாகவும், ஒருவர் ஒரு வாக்கை மட்டுமே அளிக்கக் கூடியதாகவும் பாடல் தெரிவு நிகழ்ச்சியை அமைக்கவும் பி.பி.சி ஏற்பாடு செய்து வருகின்றது.

இதேவேளை, நட்பு நாடு ஒன்று பயங்கரவாதப் பாடலை ஒலிபரப்பியது குறித்து வெளிவிகார அமைச்சர் ரிரோன் பெர்னாண்டோ பி. பி.சியிடம் கவலை தெரிவித்திருப்பதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

# வன்னி தமிழ் இலக்கிய முயற்சிகள் கருத்தரங்கும், கலை நிகழ்ச்சிகளும்

வன்னிப் பிரதேசத் தமிழ் இலக்கிய முயற்சிகள் பற்றிய கருத்தரங்கும் கலை நிகழ்ச்சிகளும் - எதிர்வரும் 31 ஆம் திகதியும் பெப்ரவரி 1ஆம், 2 ஆம் திகதிகளிலும் வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

இலங்கைக் கலைக்கழகம், தமிழ இலக்கியக்குழுவுடன் - வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்கம், கோவில் குளம் அகிலாண டேசுரர் திருக்கோவில், யாழ்.பல்கலை. வவுனியா வளாகம், வவுனியா கல்வயியற் கல்லூரி, வவுனியா தமிழ் இலக்கிய வட்டம், வவுனியா இந்து மாமன்றம் ஆகியன இணைந்து நடாத்தவுள்ள இவ்விழாவில் - இலக்கியத்துறை சார்ந்த கல்விமான்களும், எழுத்தாளர்களும், ஆய்வறிஞர்களும் ஆய்வுக்கட்டுரைகளை சமர்ப்பிக்கவுள்ளனர்.

# சின்னஞ் சிறு செய்திகள்

## கிரிக்கெட் சுற்றுப்போட்டி

கொக்குவில் வளர்மதி முன்னேற்றக் கழகத்தினால் வருடாந்தம் நடாத்தப்படும் விக்ரம் - ராஜம்- கங்கு ஞாபகார்த்த கிரிக்கெட் சுற்றுப் போட்டி இன்று கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இன்று காலை 9 மணிக்கு நடைபெறவுள்ள ஆட்டத்தில் ஜொலி ஸ்ரார் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து கே.சீ.சீ.சீ விளையாட்டுக் கழகமும், பி.ப 1.30 மணிக்கு நடைபெறும் ஆட்டத்தில்- யாழ்.பல்கலைக்கழக அணியை எதிர்த்து யங் ஸ்ரார் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன. இதன் தொடர் போட்டிகள் எதிர்வரும் 26 ஆம் திகதியும் பெப்ரவரி 2,9 ஆம் திகதிகளிலும் நடைபெறவுள்ளன.

## வருடாந்த ஒன்றுகூடல்

வடமாகாண தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச ஊழியர் நலன்புரிச்சங்கத்தின் வருடாந்த ஒன்றுகூடல்- கடந்த 8 ஆம் திகதி நலன்புரிச் சங்கத் தலைவர் கிறெமெனற் தலைமையில் சமாச மண்டபத்தில் நடைபெற்றது. சமாசத் தலைவர் தி.தவராசா, உபதலைவர் தி.இராசமூர்த்தி, செயலாளர் லூயிஸ் உட்படப் பல நிர்வாகிகளும் இதில் பங்குபற்றி சிறப்புரையாற்றினர்.

## திறப்புவிழா

வட பிரதேச இந்துப் பேரவையின் புதிய கட்டடத் திறப்பு விழா இன்று காலை 11.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

பேரவைத் தலைவர் சு.நித்தியானந்தன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார்.

## கல்வியியல் கல்லூரியில் நூல் வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி கலாநிதி தி.கமலநாதன், உப-பீடாதிபதி பா.தனபாலன் ஆகியோர் கூட்டாக ஆக்கிய 'கல்வியியலும் நவீனத்துவமும்' என்ற நூலின் வெளியீட்டு விழா- இன்று காலை 11.00 மணிக்கு, கல்லூரி தர்மலிங்கம் மண்டபத்தில் விரிவுரையாளர் செல்வி ந.நல்லையா தலைமையில் இடம்பெறவுள்ளது.

இவ்நூலின் வெளியீட்டுரையை யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் சு.சண்முகதாஸும், மதிப்பீட்டுரையை யாழ்.பல்கலைக்கழக நுண்கலைத்துறைத் தலைவர் பேராசிரியர் சபா. ஜெயராசாவும் ஆற்றவுள்ளனர். (கி,ச)

## புத்தளத்தில் டெங்கு பரவுகிறது

(கொழும்பு)

புத்தளம் பகுதியில் டெங்கு காய்ச்சல் தீவிரமாகப் பரவி வருகின்றது. இதுவரை டெங்கு நோயால் ஒன்பது பேர் பலியாகியுள்ளதாகவும், நோய்த் தாக்கத்துக்குள்ளான பெருமளவானோர் புத்தளம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகின்றது.

## இலக்கிய ஒன்று கூடல்

தமிழ் எழுத்தாளர் ஒன்றியத்தினரின் இலக்கிய ஒன்றுகூடல் நிகழ்வு எதிர்வரும் செவ்வாய்க் கிழமை மாலை 3.30 மணிக்கு ஆரியகுளம் பருத்தித்துறை வீதியில் உள்ள ஒன்றிய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

செம்பியன் செல்வன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் எழுத்தாளர் ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம், 'லண்டன் ரைம்ஸ்' ஆசிரியர் பி.ராஜசுந்தரம் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

# யாழ்ப்பாணம் சந்திக்கும் போக்குவரத்துப் பாடு!

**யாழ்.குடாநாட்டில் மக்களால் எதிர்நோக்கப்படும் பிரச்சினைகளில் போக்குவரத்துப் பிரச்சினையும் முக்கியமானது. தகுந்த போக்குவரத்து வசதிகள் மட்டுமல்ல, சீர்கெட்டுக் கிடக்கும் வீதிகள், போக்குவரத்து நெருக்கடி, தலைதெறிக்க ஓடும் வாகனங்கள், அடைந்து அடைந்து புழுங்கும் பிரயாணம், எதையும் பற்றிக் கவலைப்படாது வீதியை மறித்து ஓடும் சைக்கிள்காரர்கள், மியூசியத்தில் வைக்கவேண்டிய வாகனங்களில் பயணம்... இப்படித் தொடரான பிரச்சினைகள் பற்றி- நமது நிருபர்களிடம் மனம் திறக்கின்றனர் எங்கள் மக்கள்.**






பெயர்: பா.மகேஸ்வரி
தொழில்: வியாபாரி

ஐயோ, உந்த வசுக்காரர் ஓடுற ஓட்டத்தால பஸ்ஸில ஏறவே பயமாய்க் கிடக்குது. எங்களை இவ ஏக்கத்தில வைச்சுத்தான் வாகனம் ஓடினம். அதோட அவைகளுக்குள்ள ஒரு சவாரி. சவாரி [illegible]ண்ணத்தில எங்களை விட்டுவிட்டு வந்துவிடுவினம். இதால நாங்கள் [illegible]வரத்தைச் சரியாய் செய்யமுடியாது. உவையள் நிதானமாய் ஓடினாத்தான் எல்லாம் சரியாகும்.



பெயர்: சு.முனசிங்க
தொழில்: சாரதி

றோட்டில எல்லாம் கிடங்கு கிண்டி கிடக்கிறதால வாகனங்கள் போக்குவரத்துச் செய்கிறது சரியான கஷ்ரம். இந்த வீதிகளை கெதியா மூடி ஒழுங்கு செய்தால்தான் எங்களால வாகனத்தை சரியாய் ஓட்டமுடியும். சைககிள்ள போறவ சோடி சோடியாய் போறதாலையும் எங்களால வாகனம் ஓடமுடியாது. இவை தங்களப் பாதுகாத்து சைக்கிளை ஓடவேணும். இல்லாட்டி இவைக்குத்தான் காயம் வரும் பஸ்சுக்கு ஒண்டும் வராது. இந்தக்காலத்துப் பிள்ளைகள் உதையெல்லாம். தெரிஞ்சு நடக்க வேணும்.



பெயர்: இ.ரவிபாலன்
தொழில்: சாரதி

எங்களுக்கு ரைம் குடுத்து ஓடவிடுறாங்கள். அந்த ரைமுக்க நாங்க ஓடி முடிக்க வேணும். கிடங்குகள் வெட்டிக் கிடக்கிறதோட வீதியில பெரிய கிடங்குகள் காணப்படுகிறது. இதுகளை உடனடியாக சரிசெய்ய வேண்டும். அதோட குடிச்சுட்டு வந்து பஸ்சுக்க கரைச்சல் தருகினம். இவையளாளையும் எங்களுக்கு பிரச்சனையாய் கிடக்குது. எல்லாத்தையும் சரியாக்கினால் நாங்களும் பிரச்சினையில்லாமல் ஓடலாம்.



பெயர்: இ.நந்தினி
தொழில்: வீட்டுப்பணி

பிளேனில ஏர்றவை மட்டும் கடவுளைக் கும்புடுறது இல்லை. நாங்க பஸ்ஸில ஏறும் போது கும்பிட்டுத்தான் ஏர்றம். உவையின்ர மரண ஓட்டம் எங்களை மேலே அனுப்பிப் போடும். உவையள் தங்கட போட்டியை மறந்து மக்களுக்கு சேவை செய்ய வேணும். அதைத்தான் நாங்கள் விரும்புறம். பஸ்ஸுக்குள்ள சனத்தை ஏத்தினதை மறந்து, ஆடு, மாடு ஏத்தின மாதிரி எல்லோ மினிபஸ்காரர் ஓடினம்.



பெயர்: ச.கமலாதேவி
கோண்டாவில்.

நான் ஆசுப்பத்திரிக்கு வாறதுக்குப் பாடு எனக்குத்தான் தெரியும். நேரத்தை கவனியாது பஸ் ஓடுறதால எங்களுக்குத் தான் கரைச்சல். அதோட றோட்டுல நடந்து போகவே ஏலாது. பெடிபெட்டையள் சோடி சோடியாய் கதைச்சுக் கொண்டு போகுது. ஏதேன் கதைச்சா கிழவி வாயை மூடு எண்ணுதுகள். எப்ப திருந்தும் இந்த சமுதாயம்..?



பெயர்: யோ. சுகிர்தா
தொழில்: மாணவி

றோட்டுக்களை ஒழுங்காய் திருத்த வேணும். அப்படியென்றால் தான் நாங்கள் பள்ளிக்கூடம் போய்வர சுகமாய் இருக்கும். புது புது பஸ்சுகளை வாங்கி ஓடவேணும். பழைய பஸ்களில ஏறேக்க எங்கட பள்ளிக்கூட சட்டையள் எல்லாம் மண்ணாய் போகுது. வவுனியாவுக்கு அங்கால புது பஸ்கள் ஓடைக்குள்ள எங்கட இடத்தில மட்டும் ஏன் தான் பழைய பஸ்ஸுகளோ...!



பெயர்: சி.தங்கராஜா
தொழில்: சிற்றூர்தி நடத்துனர்

நாங்க பஸ்சில போகேக்க சனங்களை கவனமாகத்தான் ஏத்தி இறக்கிற நாங்கள். எங்களால மக்களுக்குப் பிரச்சனை இல்லை. வாகனங்களின்ர நெரிசல் கூடினதால நாங்கள் எங்கட கடமையைச் சரியாய் செய்ய முடியுது இல்லை. மற்றும்படி, சனங்களுக்கு எந்த தீமையும் எங்களாள இல்லை. சொல்லுற சனத்தைத்தான் கேக்க வேணும் என்ன பிரச்சினை எண்டு.



பெயர்: றெஜி
தொழில்: வியாபாரி

போக்குவரத்து மிகமுக்கியமாக அமைகின்ற காலகட்டத்திலே போக்குவரத்துத்துறை மிகவும் சீரமைக்கப்பட வேண்டும். அதோட நேரங்கள் மாற்றியமைக்கப்பட்டு நடைமுறைச் சிக்கல்கள் தீர்க்கப்பட்டு நாங்கள் சுதந்திரமாக பயணம் செய்ய ஒழுங்குகள் செய்து தருமாறு உரியவர்களை கேட்கிறேன்.



பெயர்: இ.மனோகரராஜா
தொழில்: ஓட்டோ சாரதி

சமாதானம் ஏற்பட்ட பிறகு சனம் கூடுதல்தானே. இதனால வாகனம் ஓடுவது கஷ்டம். அதோட தென்பகுதியில் இருந்து வருகின்ற வாகனங்கள் எல்லாம் கண்டபடி எல்லாம் நிக்குது. யாழ்ப்பாணத்து வாகனங்களும் குறிப்பிட்ட தரிப்பிடங்களில நிக்கிறது இல்லை. இதால ஓட்டோச் சாரதிகளான நாங்கள் கூடுதலாக பாதிக்கப்படுகிறம்.

நேர்காணல்: கிருபாகரன், ராஜ்குமார்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# தெல்லிப்பளை பாதுகாப்பு வலயத்தினுள் 12 ஆண்டுகளின் பின் கிரிக்கட் போட்டி

## யூனியன் கல்லூரியை பரியோவான் அணி வென்றது

உயர் பாதுகாப்பு வலயத்தினுள் யூனியன் கல்லூரி இயங்க ஆரம்பித்ததையடுத்து, 12 ஆண்டுகளின்பின், முதன்முறையாக யூனியன் கல்லூரி மைதானத்தில் நேற்று முன்தினமும், நேற்றுமாக பாடசாலைக் கிரிக்கட் போட்டி நடைபெற்றது.

யூனியன் கல்லூரிக்கும் பரியோவான் கல்லூரிக்குமான துடுப்பாட்டப் போட்டி சிநேகபூர்வமாக நடைபெற்றது.

இதில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற பரியோவான் கல்லூரி, யூனியன் கல்லூரி அணியினரை துடுப்பெடுத்தாடப் பணித்தது.

அதன்படி, யூனியன் கல்லூரி அணியினர் முதல் இன்னிங்சில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 60 ஓட்டங்களைப் பெற்றனர். இதில் குணாகரன் 16 ஓட்டங்களைப் பெற்றார்.

அதனைத் தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய பரியோவான் கல்லூரி அணியினர், அனைத்து விககெட்டுக்களையும் இழந்து 262 ஓட்டங்களைப்பெற்றனர். இதில் தனஞ்சயன் 73 ஓட்டங்களைப் பெற்றார்.

பந்துவீச்சில் யூனியன் கல்லூரியின் திலக் 4 விக்கெட்டுக்[illegible]ள வீழ்த்தினார்.

இரண்டாவது இன்னிங்சில் யூனியன் கல்லூரி 111 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது. இதில் [illegible]ந் சீவன் 21 ஓட்டங்களைப் பெ[illegible]ர். பந்துவீச்சில் பரியோவான் கல்லூரி அகிலன் 4 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

இப்போட்டியில் யூனியன் கல்லூரி அணி தோல்வியுற்றது. (68)

### அமைதிக்கான...

அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற வைபவத்தில் தூதுவர் ஜே.டி.ஏ. விஜயவர்த்தனவும் கலந்து கொண்டார்.

இந்நிகழ்வில் உரையாற்றிய கொலின் பவல், புதிய தூதுவர் சுப சிங்க அமெரிக்காவுக்குப் புதியவரல்ல. இவர் 25 வருடங்களாக அமெரிக்காவில் இருந்து கல்வி கற்றவர் எனத் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் கொலின் பவலுக்கான, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் பாராட்டுக் கடிதம் ஒன்றை புதிய தூதுவர் சுபசிங்க கையளித்தார்.

இந்தக் கடிதத்தில் இலங்கை அரசுக்கு அமெரிக்கா அளித்துவரும் ஆதரவுக்கு பாராட்டும் நன்றியும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

### 10 எம்.பிக்களுடன்..

வில் புதிதாக அமைக்கப்பட்ட இந்து சமய குருகுல பாடசாலையை திறந்து வைப்பார்.

பின்னர், இக்குழுவினர் காணாமற்போனோர் சங்கப் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடல் நடாத்திவிட்டு, உயர்பாதுகாப்பு வலயங்களுக்கும் விஜயம்செய்து இவற்றை பார்வையிடுவதுடன், இந்த உயர் பாதுகாபபு வலயத்தினால் பாதிக்கப்பட்ட மக்களையும் சந்தித்துப் பேசுவார்கள். பின்னர் - தென்மராட்சி பிரதேசத்திற்கு செல்லவுள்ளதுடன் நெடுந்தீவிற்கும் செல்லவுள்ளனர். நெடுந்தீவு செல்லும் இவர்கள், ஈ.பி.டி.பியினருக்கு எதிராகப் போராட்டம் நடாத்திவரும் மக்களையும் சந்தித்துப் பேசுவார்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (லி)

# யாழ்.குடாநாட்டுக்கு மின்சாரம் வழங்கும் 17 இயந்திரங்களில் 16 பழுதடையும் நிலை

வடக்கில் மின்சார விநியோகத்தை மேலும் விரிவுபடுத்துவதற்கும் சீராக்குவதற்கும் மின்சக்தி, எரிபொருள்துறை அமைச்சும், இலங்கை மின்சாரசபையும், 'கூல் எயர்' நிறுவனமும் ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திட்டுள்ளன.

இந்த ஒப்பந்தத்தின்படி 40 கோடி ரூபா 'கூல் எயருக்கு' அமைச்சினால் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

இப்போது 17 இயந்திரங்கள் மூலம் வடக்குக்கு மின்சாரம் வழங்கப்பட்டு வருகின்றது. இதில் 16 இயந்திரங்கள் பழுதடையும் நிலையில் உள்ளன. இதைத் திருத்தி, புனரமைப்பதற்கே இந்த நிதி கடனாக வழங்கப்பட்டுள்ளது.

தற்பொழுது 46 ஆயிரம் மின் பாவனையாளர்கள் வடக்கில் [illegible]ள் ளனர் என்றும், இயந்திரங்கள் புனரமைத்த பின்பு 77 ஆயிரம் மின் பாவனையாளர்களுக்கு மின் வழங்க முடியும் என்றும் மின்சாரசபை [illegible]ரி வித்துள்ளது.

### உயர்பாதுகாப்பு...

நலவாயத் தலைவர் ஸ்ரீபன் ஸ்மித், இலங்கைக்கான பிரித்தானியத் தூதுரகத்தின் செயலர் பென்டோக், திட்டமிடல் அதிகாரி பமிலா ஷொக்டன் மற்றும் பிரித்தானியத் தூதரகத்தின் ஊடக அதிகாரி நிலக்ஷன் சுவர்ணராஜா ஆகியோர் பேச்சுவார்த்தைகளின்போது கலந்துகொண்டனர்.

நேற்றைய சந்திப்பின்போது, படையினரின் பாதுகாப்பு வலயம் தொடர்பாகவும்,சிறான் கட்டமைப்பும், செயற்பாடுகள் தொடர்பாகவும் தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ள சமாதானப் பேச்சுவார்த்தைகள் குறித்தும் பிரித்தானிய தூதுக்குழுவினருக்கு தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெளிவாக எடுத்துக்கூறினார்.

தற்போது ஓர் ஆண்டு காலம் போர் நிறுத்தம் நடைமுறையில் இருந்தபோதும், அதன் முயற்சிகள் தொடர்கின்றபோதிலும் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் முக்கிய முட்டுக்கட்டையாக உயர்பாதுகாப்பு வலயப் பிரச்சினை இருப்பதாக பிரித்தானிய தூதுக்குழுவினிடம் சுட்டிக்காட்டப்பட்டது.

இடம்பெயர்ந்த மக்கள் தமது சொந்த இடங்களுக்குச் சென்று மீளக குடியேறமுடியாத நிலையில் உள்ளனர். இது ஓர் அடிப்படை உரிமை மீறல் விடயம் எனச் சுட்டிக்காட்டிய அரசியற்துறைப் பொறுப்பாளர் -

போரினால் இடம்பெயர்ந்த மக்கள போர் ஓய்ந்த நிலையில் மீளவும் தமது இடங்களில் குடியேற வேண்டும். ஆனால், இந்த உரிமை மக்களுக்கு இன்னும் கிடைக்கவில்லை. சிறிலங்காப் படையினர் அமைத்துள்ள உயர்பாதுகாப்பு வலயப் பகுதிகளில் உள்ள பல ஆயிரக்கணக்கான வீடுகளில், படையினர் இன்னும் நிலைகொண்டிருப்பதால், மக்கள் இன்னமும் சமாதானப் பெறுபேறுகளை அடைய முடியாதுள்ளனர். போரினால் சகலதையும் இழந்த மக்களுக்கு அடிப்படைக் கட்டுமானங்களை வழங்கி, மீள்குடியேற்றம் செய்யவேண்டும். இதற்காக அப்பகுதியில் உள்ள கண்ணிவெடிகள் முழுமையாக அகற்றப்படுவதுடன் மற்றும் அபிவிருத்திப் பணிகளையும் முன்னெடுக்க வேண்டும் என்று அவர் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பில், சிறான் செயற்பாடுபற்றி பிரித்தானிய தூதுக்குழுவினர் பாராட்டுத் தெரிவித்தனர். அதனூடாகத் தாமும் பங்களிப்பு வழங்க விருப்பம் தெரிவித்துள்ளனர். இது பற்றி பிரித்தானிய தூதுவர் ஸ்ரீபன் எவன்ஸ் கருத்துக் கூறியபோது -

தற்போதைய சமாதானப் பேச்சுவார்த்தைகளில் இருதரப்பினரும் மிகுந்த ஆர்வத்தோடு இருப்பதை அவதானிக்க முடிகின்றது. இன்று நடந்த பேச்சுக்கள் தொடர்பாக நாம் எமது அரசுடன் கதைக்கவுள்ளோம் எனத் தெரிவித்தார்.

### இராணுவ...

தகவல்கள் பல சமயங்களில் தவறானதாக இருப்பதாலேயே இவ்வாறு அரசாங்கம் நெருக்கடிகளை எதிர்கொள்ள நேரிடுவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

### பொடா..

உலகெங்கும் வாழும் தமிழர்கள் தம்மால் இயன்ற நிதியுதவிகளைச் செய்ய வேண்டும் என்றும் நெடுமாறன் கோரிக்கை விடுத்துள்ளார்.

### ஜப்பானின்...

அவர் இதனைத் தெரிவித்தார்.

சமாதான முயற்சியில் ஜப்பானின் பங்களிப்பு குறித்து இந்திய அரசாங்கத்திற்கு ஜப்பான் விளக்கிக கூறியுள்ளது. அதனை இந்தியா விளங்கியிருக்க வேண்டும் என்று தெரிவித்த அகாஷி, இலங்கையின் சமாதான முயற்சியில் தலையிட வேண்டாம் என இந்தியா ஒருபோதும் தமக்கு வேண்டுகோள் விடுக்கமுடியாது என்றும் தெரிவித்தார். பெரும்பாலும் தமது பிராந்தியப் பாதுகாப்பிலேயே இந்தியா அக்கறை செலுத்துகின்றது. அந்தப் பாதுகாப்பிற்கு, இலங்கை இனப்பிரச்சினைத் தீர்விற்கான பேச்சுவார்த்தைகள் ஏதேனும் பாதிப்பை ஏற்படுத்திவிடுமோ என இந்தியா அஞ்சுகின்றது.

அதனாலேயேதான், இலங்கையில் எவ்வகையான அரசியல் தீர்வு ஏற்படப்போகின்றது என்பதை இந்தியா அவதானித்து வருகின்றது என்றும் அவர் தெரிவித்தார். அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் பேச்சுவார்த்தையை மிகவும் பக்குவமான முறையில் முன்னெடுக்கின்றனர். புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தை லண்டனில் சந்தித்துப்பேசியுள்ளேன. அரசியல் பிரிவுத் தலைவர் தமிழ்ச்செல்வனை வன்னியில் சந்தித்து நீண்ட நேரம் பேசினேன். அவர்கள் நீதியான அரசியல் தீர்வு தமக்கு கிடைக்க வேண்டும் என்பதிலும் சமாதானம் ஏற்படவேண்டும் என்பதிலும் மிகவும் அக்கறையாக இருபபதை, தன்னால் உணரமுடிந்தது என்றும் அவர் தெரிவித்தார். (200)

### ராணுவப் புலனாய்வு...

அண்மையில் இராணுவப் புலனாய்வுத்துறையால் ஒரு அறிக்கை வழங்கப்பட்டது. கிழக்கில் புலிகள் தீவிர ஆட்சேர்ப்புச் செய்வதாகவும் 400 சிறுவர்களைக் கடத்தி வைத்திருப்பதாகவும் அச்செய்தியில் கூறப்பட்டிருந்தது.

ஆனால், அது தவறான தகவல் என்பது மேலதிக விசாரணைகள் செய்யப்பட்டபோதுதான் தெரியவந்தது. அப்போது கிழக்குப் பகுதியில் கடும் மழை பெய்துகொண்டிருந்ததால், புலிகள் ஆட்சேர்ப்பை நிறுத்தியிருந்தனர்.

இப்படி இராணுவப் புலனாய்வுத் துறையின் தகவல்கள் பல தவறானவையாகவே உள்ளன. அத்துடன், படையதிகாரிகள் தமது நாக்குகளை அடக்கி வாசிக்கவேண்டும் எனவும் பிரதமர் மேலும் தெரிவித்துள்ளார்.

### கோபி அனான்...

தாம் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பிக்கப்போவதாக களுத்துறைச் சிறைச்சாலைக் கைதிகள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை -

கடந்த பதின்மூன்றாம் திகதி தமிழ்க் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரான சிவாஜிலிங்கம், களுத்துறைச் சிறைச்சாலைக்குச் சென்று தமிழ் அரசியற் கைதிகளுடன் கலந்துரையாடினார். இதன்போது - தமிழ் அரசியற் கைதிகள் தொடர்பாக அமைச்சர் மிலிந்த மொறகொட, அமைச்சர் ஜெயலத் ஜெயவர்த்தன ஆகியோரை இது விடயமாகச் சந்தித்துக் கலந்துரையாடிவிட்டுத்தான் வந்திருப்பதாகவும் தெரிவித்தார்.

இதன்போது், களுத்துறை தமிழ் அரசியற் கைதிகளின் பிரதிநிதிகள், நாடாளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கத்திடம் - தமிழ்க் கூட்டமைப்பிற்குள் ஒற்றுமையில்லை. இதனால்தான் கைதிகளை விடுதலை செய்யக் கோரி அரசாங்கத்திற்கு இவர்களால் அழுத்தம் கொடுக்க முடியவில்லை.

நாம் உண்ணாவிரதம் இருக்கும்போது, தமிழ் அமைச்சர்கள், தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உண்ணாவிரதத்தைக் கைவிடும்படி பெரும் ஆர்வத்துடன் கேட்பார்கள். ஆனால், இவர்கள் எமது விடுதலை தொடர்பாக செயற்பாட்டில் இறங்குவதில்லை, எனவும், வட,கிழக்குப் பகுதிகளில் கடமைபுரிந்த இராணுவத்தினர் மீது, வட,கிழக்குப் பகுதிகளில் குற்றம் சாட்டப்பட்ட வழக்குகள் அவர்களது சொந்த இடங்களிற் கும் கொழும்பிற்கும் அவர்களது நன்மை கருதி மாற்றப்படுகிறது. இதேபோல், தென் பகுதியில் குற்றஞ்சாட்டப்பட்ட தமிழ் அரசியற் கைதிகளின் வழக்குகளையும் தத்தமது சொந்தப் பிரதேசத்திற்கு மாற்றப்பட வேண்டும் எனவும் கூறினர்.

இவை குறித்து தமிழ்க் கூட்டமைப்போ, அரசோ எதுவித நடவடிக்கைகளையும் எடுப்பதில்லை எனவும் களுத்துறை தமிழ் அரசியற் கைதிகள், நாடாளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கத்திற்குத் தெரிவித் ததுடன் தாம் உண்ணாவிரதம் இருக்கப்போவது பற்றி கோபி அனானுக்கு தெரிவிக்கும்படியும் கூறினர். (01)


தென்னிந்தியாவில் இருந்து



முதல் முறையாக யாழ்ப்பாணம் என்னும் புண்ணிய பூமிக்கு வருகைதந்துள்ள பரம்பரை சோதிடக் கலையில் புகழ்பெற்ற சிவபால ஜோதிடர்

ராஜகுருசாமி அவர்கள்

☆ கைரேகை ☆ ஜாதகம் ☆ எண்கணிதம்
☆ பெயர்ராசி ☆ திருமணப் பொருத்தம்

இவற்றில் பல வருட அனுபவமும் புகழும் பெற்றவர்.

ராஜகுருசாமி, மிலன்ஸ் மல்ரி கொம்பிளக்ஸ்
60/1(112), TEMPLE ROAD (Near ICRC),JAFFNA.

(சீ-514)



Vacancies

We have career opportunities in the following positions for ideal candidates who are enegetic, dynamic and result oriented

1. MANAGER (Able to handle In bound & out bound passengers, Cargo, Local & overseas ticketing and manage the travel agent with fluency in three languages)
2. STATION MANAGER (Ability to handle the domestic airline)
3. ASSISTANT MANAGER
4. SALES MANAGER
5. TICKETING OFFICER
6. ACCOUNTS CLERK
7. FIELD OFFICER
8. SECURITY GUARD
9. DRIVER
10. TECHNICIAN
11. STORE KEEPER

Please forward your applications along with a detailed curriculum vitae to reach us within 7 days of this advertisement.

Human Resource Manager,
THAMPI AIR TOURS(PTE) Ltd
90, Kanthappasegaram Road,
Jaffna.

A MEMBER OF THAMPI HOLDINGS (PTE) LTD.

(15)


இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 19.01.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.